


# மலருக்கு மது ஊட்டிய வண்டு

கே.பி.நீலமணி



காயத்ரி பப்ளிகேஷன்

5

# மலருக்கு மது ஊட்டிய வண்டு

கே. பி. நீலமணி

காயத்ரி பப்ளிகேஷன்
26-B வேதாசல கார்டன்
மந்தவெளி, சென்னை - 600 028

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | மலருக்கு மது ஊட்டிய வண்டு |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிப்பு டிசம்பர் 1992 |
| ஆசிரியர் | : | கே. பி. நீலமணி |
| மொழி | : | தமிழ் |
| (C) உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாளர் | : | காயத்ரி பப்ளிகேஷன்<br>26-B வேதாசல கார்டன்<br>மந்தவெளி, சென்னை-600028. |
| தாள் | : | 10.7 KG வெள்ளைத்தாள் |
| எழுத்து | : | 10 Pt |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| பக்கங்கள் | : | 72 |
| விலை | : | ரூ. 12 |
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்<br>91, டாக்டர் பெசன்ட் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-600 014. |

# பதிப்புரை

இந்த நூலில் இடம் பெற்றுள்ள கதைகளை எழுதியுள்ள ஆசிரியர் கே. பி. நீலமணி அவர்கள், வாசகர் வட்டத்திற்கு நன்கு பரிச்சயமானவர். ஆனந்த விகடன், கல்கி, குமுதம், அமுதசுரபி, தினமணி கதிர் போன்ற பல்வேறு பத்திரிகைகளில் எண்ணற்ற சிறு கதைகளை எழுதியுள்ளவர்.

கலைமகளில் தொடராக வெளிவந்த இவரது 'புல்லின் இதழ்கள்' என்னும் நாவல் ஏராளமான வாசகர்களின் பாராட்டுதலைப் பெற்றது.

குழந்தைகளுக்காகப் பல சிறந்த நூல்கள் எழுதி அவற்றிற்காக குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தங்கம், வெள்ளிப் பதக்கங்களையும்; தமிழக அரசு, இலக்கியச் சிந்தனை ஆகியவற்றின் பரிசையும் பெற்றவர்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கதைகள் முறையே, தினமணிகதிர், ஆனந்த விகடன், கலைமகள், தினமணி சுடர் ஆகிய பத்திரிகைகளில் வெளியானவை—இவற்றை நூலாக வெளியிட அனுமதியளித்த ஆசிரியருக்கு தொடர்ந்து எங்களது பதிப்பக நூல்களை வாங்கி ஆதரிக்கும் வாசகர்களுக்கும் நன்றி.

காயத்ரி பப்ளிகேஷன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மலருக்கு மது ஊட்டிய வண்டு | 5 |
| 2. | ஓடும் ரயிலில் ஒரு சரணாகதி | 31 |
| 3. | ஒரு கிளைப் பறவைகள் | 43 |
| 4. | அம்மா காத்திருக்கிறாள் | 56 |

# மலருக்கு மது ஊட்டிய வண்டு

**வா**சலை நோக்கியுள்ள தன்னுடைய மாடி அறையில் ஜன்னல் ஓரமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில் இருக்கையும் கிடைக்கையும் அற்றதொரு நிலையில், தலை மாட்டில் அடுக்கி வைத்திருக்கும் தலையணையில் சாய்ந்தபடி படுத்துக் கொண்டிருந்த பாகவதர், திரை நீக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியே வெளியுலகைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நீரில் கரைகிற உப்பைப் போல, பார்த்துக் கொண்டிருக்கும்போதே படிப் படியாகப் பொழுது புலர்வது கண்ணுக்குத் தெரிந்தது.

அறையின் கதவு திறக்கப்படுகிற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் பாகவதர். கையில் ஆவி பறக்கிற காப்பியை ஏந்தியபடி சோபியா உள்ளே நுழைந்தாள்.

இவ்வளவு கருக்கலில், அதற்குள் குளித்துப் புத்தாடை கட்டிக் கொண்டிருந்த அவளது தோற்றத்தை பாகவதர் வியப்போடு பார்த்தார்.

தலை ஈரத்தை உறிஞ்சுவதற்காக முடிச்சில் துவட்டிய துண்டை முடிந்து கொண்டிருந்தாள்.

'இந்தப் பாங்கெல்லாம்கூட இவளுக்கு எப்படி வந்தது?'

, கையிலிருந்த காப்பியை கட்டிலின் அருகிலிருந்த டீப்பாயில் வைத்துவிட்டு அவள் திரும்புகையில், ''இன்னிக்கி என்ன விசேஷம் சோபா?'' என்று பாகவதர் அன்பான குரலில் வினவினார்.

''இன்று கார்த்திகைப் பண்டிகை ஐயா'' சோபியா பளிச்சென்று கூறினாள்.

ஜலதரங்கக் கிண்ணத்தில் குச்சியால் தட்டியதுபோல் சொற்கள் மணி மணியாக ஒலித்தன. அந்த ஒலிஇன்பத்தை செவிமடுத்தபடி காப்பியை ரசித்துக் குடித்துக் கொண்டே கேட்டார்:

''தலையில் இப்படி பந்துபோல் துணியைச் சுற்றிக் கொள்ள உனக்கு எப்படித் தெரிந்தது?''

''அம்மாதான் ஐயா, கட்டி விட்டாங்க.''

இந்த வார்த்தையைக் கூறும்போது, அவளுள் ஏதோ தாழ்மையுணர்ச்சி தோன்றியிருக்க வேண்டும் என்று பாகவதருக்குப் பட்டது. இல்லாவிட்டால், சாதாரணமாகத் தான் கேட்ட கேள்விக்கு உடனே இத்தனை அவசரமாக, 'இப்போ எனக்கு நன்றாக புரிஞ்சு போச்சு ஐயா;இனிமே நானே கூடத் தனியாகக் கட்டிக்குவேன்'— என்று படபடப்புடன் கூறுவானேன்?

பாகவதர் காலி பண்ணி வைத்த காலி டபரா டம்ளர்களைக் கையில் எடுத்துக்கொண்டவள், 'ஹாட் வாட்டர்... இல்லே... இல்லே... வெந்நீர் ரெடியானதும்—'த்சு...' தயாரானதும் நான் வந்து கூப்பிடுகிறேன் ஐயா... என்றாள்.

''பரவாயில்லை! 'ஹாட் வாட்டரையும்', 'ரெடி' யையும் தமிழ்ப் படுத்தல்லேனாலும் எனக்குப் புரியும் சோபா!'' என்று அவர் வேடிக்கையாகக் கூறியபோது, சோபியா தன்னையும் மீறிச் சிரித்து விட்டாள்.

பட்டுப் புடவை சரசரக்க அவள் கீழிறங்கிச் செல்லும் போது, பொற் பதுமையொன்று உயிர் பெற்று மெல்ல நடந்து செல்வது போலிருந்தது.

பாகவதர் மெல்ல மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டார். குழந்தையின் மழலையைப் போல், கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் சோபியாவின் தமிழைக் கேட்டு மட்டுமல்ல; வெள்ளைக்காரப் பெண்ணுக்கு இந்த இந்தியப் புடவையும், குங்குமப் பொட்டும் என்ன மாய்த்தான் மெருகூட்டுகிறது என்பதை நினைத்து மட்டு மல்ல, தன்னிடம் வித்தை கற்றுக் கொண்டு குறுகிய காலத்திற்குள் நாடே வியக்கும் வண்ணம், பேரும் புகழும் பெற்று விட்டாளே; ஆயினும் துளிக்கூடக் கர்வம் இல்லையே என்பதையும் எண்ணித்தான் அவர் வியந்து கொண்டிருந்தார்.

சோபியா சென்று வெகு நேரமான பின்பும் பாகவதர் அந்தத் திசையிலிருநது தன் பார்வையைத் திருப்பவே இல்லை. எத்தனையோ சிஷ்யர்களை உல குக்கு அளிந்த பாகவதருக்கு, சோபியாவை சிஷ்யையாகப் பெற்றதே பாக்கியம் போல் இருந்தது. எண்ணங்கள் அவரை எங்கேயோ இழுத்துச் சென்றன.

**கொ**ஞ்சம் கீழே வற்றேளா?'' மாடிப்படியின் கீழே யிருந்து கல்யாணி அம்மாள் குரல் கொடுத்தாள்.

''என்ன விசேஷம்?''

''புதுசா யாரோ வந்திருக்கா; அன்னிக்கி புரொபசர் சடகோபன் யாரையோ அனுப்பரதாச் சொல்லிட்டுப் போனாரே, அவா போலேருக்கு.''

பாகவதருக்கு சட்டென்று ஞாபகம் வந்துவிட்டது.

சடகோபனிடம் வந்து, முறையாகத் தமிழ் கற்றுக் கொண்டு போன இரண்டு அமெரிக்கர்களும் இந்தத்

தடவை கர்நாடக சங்கீதம் சொல்லிக் கொள்ள வேண்டும் என்கிற ஆவலோடு வந்திருக்கிறார்கள். சடகோபனும் பாகவதரும் நெருங்கிய நண்பர்கள்; அத்தோடு, அவர்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கத் தகுந்தவர் பாகவதர்தான் என்பது சடகோபனின் எண்ணம்.

முதலில் பாகவதர் சடகோபனிடம் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்ளவில்லை. 'இனம், நாடு, மொழி இவற்றால் வேறுபட்ட மேல்' நாட்டாருக்கு நம்முடைய கர்நாடக இசை சுட்டுப் போட்டாலும் வராது என்பது பாகவதரின் எண்ணம். ஆனால் சடகோபன் விடவில்லை.

''நீங்கள் வித்தையை ஆரம்பித்துப் பாருங்களேன்; வந்தால் தொடரட்டும்; இல்லாவிட்டால் அவர்களாகவே நின்று விடுகிறார்கள். நான்கூட இப்படித்தான் இவர்களைப் பற்றி அலட்சியமாக ஆரம்பத்தில் நினைத்தேன்'' என்று சடகோபன் கூறவே, பாகவதரும் தன் பிடிவாதத்தைத் தளர்த்தினார்.

''என்னை என்ன செய்யச் சொல்லறேள்; காத்துண்டு இருக்காளே; அவாளை மேலே அனுப்பவா?''

—'இப்படிக் கீழேயிருந்தே எல்லாவற்றையும் கேட்க வேண்டியிருக்கிறதே; அவர்கள் என்ன நினைப்பார்கள்?' என்று கல்யாணி அம்மாளுக்குக் கூச்சமாக இருந்தது என்றாலும், ரத்த அழுத்த வியாதி காரணமாகத் தன்னை 'மாடிப்படி ஏறக் கூடாது'—என்று உத்தரவு போட்டு விட்ட டாக்டருடைய வார்த்தைகளைப் புறக்கணிக்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது.

'மேலே இவர், இன்னும் என்னதான் பண்ணிக் கொண்டிருக்கிறார்...?' என்று திரும்பியபோது பாகவதர் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்.

'எங்கே அவர்கள்?' என்று கணவர் கேட்கு முன்பு, ''முன் ரூம்லே உட்கார்த்தி வச்சிருக்கேன்'' என்று கூறி விட்டு அடுக்களைக்குச் சென்று விட்டாள் கல்யாணி அம்மாள்.

பாடம் சொல்லிக் கொள்ள வந்திருப்பவர்கள் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும், ஓர் ஆணும். அவர்களை 'பெல்பாட்டமும்' 'டைட்ஸ்ஸுமாக' எதிர்பார்த்த பாகவதர், அறைக்குள் நுழைந்ததும் பிரமித்துப் போனார்!

அழகே உருவான அந்த இளம்பெண், கைத்தறிப் புடவையைக் கட்டிக் கொண்டு, தலையைப் பின்னிப் பூ வைத்துக் கொண்டிருந்தாள். அந்த வாலிபன், தூய வெண்ணிற ஜிப்பாவும், கதர் வேஷ்டியுமாகக் காட்சியளித்தான். அவர்களது இந்த முதல் தோற்றமே பாகவதரது உள்ளத்தில் ஒருவித நம்பிக்கை ஒளியை ஊட்டுவிப்பதாக இருந்தது.

பாகவதரைக் கண்டதும் இருவரும் ஏக காலத்தில் தங்களது ஆசனத்தினின்றும் எழுந்து நின்று; கைகளைக் குவித்த வண்ணம், ''வணக்கம் ஐயா'' என்று ஏகோபித்த குரலில் கூறினர். பாகவதரது கரமும் அவரையுமறியாமல் உயர்ந்து விட்டது. அவர்களை ஆசனத்தில் அமரும்படி பணித்தார்.

''கச்சேரிகளுக்கு வெளியூர் போய்விட்டு இன்னிக்கு காலமே ஆறு மணிக்குத்தான் வந்தேன். பத்து நாளைக்கு முன்னே சடகோபன் வந்தப்போ பஞ்சாங்கத்தைப் பார்த்ததிலே இன்னிக்கு விட்டா இந்த மாசத்திலே நல்ல நாளே இல்லேன்னுதான் உங்களை வரச்சொல்லியிருந்தேன். ஆனால் அலைச்சல்லே எப்படியோ மறந்துட்டேன்...'' என்று பாகவதர் கூறிக்கொண்டு வரும்போதே, ''பரவாயில்லை ஐயா; நாங்கள் வேண்டுமானால் இப்போது போய் விட்டு சாயங்காலம் வருகிறோம். நீங்கள் கொஞ்சம்

ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று விநயமாகக் கூறினான்.

''ரெஸ்ட்டா...? பாடறதும், பாடம் சொல்லிக் கொடுக்கறதும்தான் எனக்கு ரெஸ்ட்டை விடச் சிறந்த டானிக். வாங்கோ மாடிக்குப் போவோம்.''

பாகவதர் மாடியேறிப் போன பிறகும், அந்த மாண வர்கள் இருவரும் கீழேயே தயங்கி நிற்பதைக் கண்டதும், ''என்ன வேணும்...?'' என்று கேட்டுக்கொண்டு கல்யாணி அம்மாள் வந்தாள்.

''கால் கழுவ வேண்டும்'' என்று பாதத்தைக் காட்டி அவர்கள் கூறியதைக் கேட்டதும் கல்யாணி அம்மாளுக்கு ஒரு கணம் வியப்பை அடக்க முடியவில்லை! கொல்லைப் புறம் அழைத்துச் சென்றாள்.

'பாடம் நடக்கிற இடம் கோவில் மாதிரி; அங்கு கைகால் அலம்பி விட்டுத்தான் போக வேண்டும் என்று, வித்தைக்கு மதிப்புக் கொடுக்கிற அளவு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்களே! இவர்கள் என் கணவரிடம் பெயர் எடுக்கக் கூடியவர்கள் தான்' என்று அப்போதே கல்யாணி அம்மாள் ஒரு புள்ளி போட்டுவிட்டாள்.

கிணற்றங்கரைக்கு அழைத்துச் சென்றதற்காக அந்தப் பெண் நன்றி கூறத் தலைப்பட்டபோது, ''அதெல்லாம் இருக்கட்டும், சீக்கிரமா மேலே போங்கோ, அவா காத் துண்டு இருப்பா'' என்று அவர்களைத் துரிதப்படுத்தி மேலே அனுப்பி வைத்த பின்பும், அந்தப் பெண் மட்டும் கீழேயே தன் மனத்திற்குள்ளேயே தங்கி விட்டாற் போன்றதொரு உணர்ச்சி கல்யாணிஅம்மாளைப் பற்றிக் கொண்டது.

விஸ்தாரமான ஹாலில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தின் மீது சுருதிப் பெட்டியும் தம்பூராவும் இருந்தன.

ஆரம்பப் பாடத்திற்கான சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம் முடிந்த பின்னர், பாகவதர் தம்புராவை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். அவர்கள் இருவரும் குருவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்தனர்.

பாகவதர் அவர்களை வாயாற, மனமாற வாழ்த்தி விட்டு அமரச் சொன்னார். பையில் அவர்கள் கொண்டு வந்திருந்த, புஷ்பம், பழங்களையும், அட்சதைத் தட்டை யும் எடுத்துக்கொண்டு ''இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறோம் ஐயா'' என்று கனவேகமாக இருவரும் கீழிறங்கிச் செல்லவுமே, அவர்களது நோக்கத்தைப் புரிந்துகொண்ட பாகவதர் மெய்சிலிர்த்துப் போனார்.

'இறைவா, என்னிடத்தில் உன் திருவிளையாடலை ஆரம்பித்திருக்கிறாயா?' என உள்ளத்திடம் கேட்டுக் கொண்டபோது, அவரையும் அறியாமல் அவரது விழி களின் கடையிலே கண்ணீர் பூத்து நின்றது.

அவர்கள் படியேறி வருகிற சப்தம் கேட்டது. பாகவதர் பவுண்டன் பேனாவைத் திறந்து வைத்துக் கொண்டார்.

''நோட்டுப் புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்களா?''

''இதோ.''

இருவரும் ஏககாலத்தில் இரண்டு கனத்த புத்தகங் களை நீட்டினர். அதன் முதற்பக்கத்தில் நான்கு மூலை களிலும் குங்குமத்தைக் குழைத்துத் தடவி, பிள்ளையார் சுழி போட்டார். அதன்கீழ் 'குருவே துணை' என்று எழுதியபடி, ''உங்கள் பேர் என்ன?'' என்று கேட்டார்.

என் பெயர் டேவிட் ஜான். ஒகியோ (Ohio). மாநிலத்திலுள்ள 'யெல்லோ ஸ்பிரிங்' (Yellow Spring) என்னுடைய ஊர். என் தந்தை; டேடன் (Dayton)

நகரத்தில் ஒரு மோட்டார் தொழிற்சாலை வைத்திருக்கிறார். இவள் பெயர் சோபியா (Sophia), சிறு வயதிலேயே அப்பா, அம்மாவை இழந்துவிட்டாள். அம்மாவைப் பெற்ற பாட்டியோடுதான் 'கிளாவ்லாண்டில்' (Glavlands) இருக்கிறாள். இரண்டு பேரும் ஒரே கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றோம். நாங்கள் தூரத்து உறவினர்கள்'' என்று பாகவதர் கேட்ட ஒரு கேள்விக்கு, டேவிட் சுருக்கமாகத் தங்களுடைய வாழ்க்கைக் குறிப்பையே கூறிவிட்டான்.

''ரொம்ப சரி'' என்று கேட்டுக்கொண்ட பாகவதர் இருவருடைய நோட்டிலும் சரளி வரிசைகளை எழுதிக் கொடுத்து, ''இதுதான் கர்நாடக சங்கீதத்திற்கு ஆரம்பப் பாடம். இது, மாயா மாளவ கௌள ராகத்தில் அமைஞ்சிருக்கு. முதல்லே, சுருதியோடேயே சேர்ந்து குரலை நிறுத்திப் பழகறதுக்கு, 'ஷட்ஜமம், பஞ்சமம், மேல் ஷட்ஜமம்' என்கிற மூணு ஸ்தாயிக்கும், ஸ- ப-ஸ-ன்னு பாடிப் பழகணும்.

அதாவது, உங்க சங்கீதத்திலே 'சுப்ரானோ' (Suprano) 'ஆல்டா' (Alto) 'டெனர்' (Tenar) 'பேஸ்' (Base) ன்னு 'வாய்ஸ் ரேஞ்ச்' (Voice range) இருக்காப்பிலே; பாடற அவரவர்களுக்கு சாரீரம் இடம் கொடுக்கற மாதிரி, வசதியான ஒரு சுருதியைத் தேர்ந்து எடுத்துண்டு, இந்த 'ஸ-ப-ஸ' வைப் பாடணும். இப்போ நான் பாடறேன். பிறகு நீங்கள் தனித்தனியே பாடலாம்'' என்று கூறியபடி, மடியிலிருந்த தம்பூராவின் தந்திகளை மீட்டினார். அதன் இனிய நாதம் அறை எங்கும் பரவியது.

தாம் சொல்லிக் கொடுப்பதை சுருதியோடு சேர்ந்து டேவிட்டையும், சோபியாவையும் தனித் தனியே, திரும்பத் திரும்பப் பாடிச் சொல்லிக் கேட்டபோது,

பாகவதருடைய மனத்தில் எல்லை மீறிய மகிழ்ச்சியும், நம்பிக்கையும் பிறந்தன.

பாடங்கள் பெருகிக் கொண்டிருந்தபோது, 'இவர்கள் என்றாவது ஒருநாள் பயிற்சி முடிந்து அமெரிக்கா செல்ல வேண்டியவர்கள்தாமே?' என்று பாகவதர் எண்ணிப் பார்த்தபோது, அவருக்கு உள்ளத்தை என்னவோ செய்தது.

பாகவதரைவிடப் பன்மடங்கு சோபியாவைநினைத்து கல்யாணி அம்மாள்தான் கலங்கினாள். ஆனலே் இந்தக் கலாசாரத்தின் அடிப்படை!—

கல்யாணி அம்மாளுக்கு பாபு ஒரே பிள்ளை. அவனுக்குப் பிறகு ஒரு பெண் பிறந்தது. அதன் மீது உயிரையே வைத்திருந்தார் பாகவதர். தம்பதியரை ஏமாற்றி விட்டுக் குழந்தை இறந்து விட்டது. அதன் பிறகு அவர்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை.

இப்போது அந்தக் குறையைத் தீர்ப்பது போல் சோபியாவின் வருகையும், அவளுடைய செய்கையும் இருந்தன. அளவிற்கு மீறிய பாசத்துடன் சோபியா ஒட்டிப் பழகி வரவே, கல்யாணி அம்மாளுக்கு சோபியாவை ஒரு நாள் பார்க்காவிட்டால் கூட என்னவோ போல் இருக்கும்.

எந்த விசேஷமோ, பண்டிகையோ வந்தாலும் டேவிட்டையும், சோபியாவையும் தங்கள் வீட்டில்தான் சாப்பிட வேண்டுமென்று கூறிவிடுவாள்.

மேஜை மீது பீங்கான் தட்டுக்களில் கத்தியினாலும், ஸ்பூனினாலும், ஃபோர்க்காலும் சாப்பிட்டுப் பழக்கமுடைய அவர்கள், மனையில் சம்மணமிட்டு அமரிக்கையாய் உட்கார்ந்திருக்கிற அழகையும், சாப்பிடுகிறபோது இலையில் ஓடுகிற ரசத்தையும் பாயசத்தைவும் கையால்

பிடிக்கிறபோது படுகிற அவதியையும் கண்டு பாகவதர் தம்பதியர் மிகவும் ரசித்தனர். ஆனால், விரைவிலேயே இலையில் சாப்பிடுகிற கலையிலும் அவர்கள் தேறி விட்டனர்.

இப்படி எல்லா விஷயங்களையும் கிரகித்துக் கொள்ள இருக்கிற துடிப்பைப் போலவே, இசைப் பயிற்சியிலும் அவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தைப் பற்றி பாகவதர் மனைவியிடம் அடிக்கடி கூறுவார். "டேவிட்டும், சோபியாவும் விரைவிலேயே கர்நாடக இசையில் மிகப் பிரபல பாடகர்களாகச் சோபிக்கப் போகிறார்கள்" என்று அவர் கூறும்போது, அந்தச் சொற்களைக் கடந்து தன் கணவருடைய உள்ளத்தின் அடித்தளத்தில் புண்ணாகிக் கிடக்கும் ஏமாற்றத்தின் எதிரொலியை —வேதனையை— கல்யாணி அம்மாளாலும் கண்டு கொள்ள முடிந்தது. ஆனால், அதைப் புரிந்து கொள்ள வேண்டியவன் தன்னுடைய மகனேயல்லவா!

தன் பிள்ளை பாபுவைப்பற்றி பாகவதர் ஆரம்பத்தில் பெரிய கனவெல்லாம் கண்டு கொண்டிருந்தார். அவனுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து அவன் பெரிய வித்துவானாகப் பிரகாசிப்பதைக் காண வேண்டுமென்று அவருக்கு அளவு கடந்த ஆசை. ஆனால் அந்த ஆசையெல்லாம் அரும்பிலேயே கருகி விட்டது.

ஒரு வித்தை பரிணமிக்க வேண்டுமானால், அதைக் கற்றுக்கொள்கிறவனுக்கு அந்த வித்தையின்மீது அளவு கடந்த ஆர்வமும், ஆழ்ந்த பற்றும், தணியாத தாகமும் இருக்க வேண்டும். உள்ளத்திலிருந்து பீறிட்டு வரக் குமுறிக் கொண்டிருக்கும் அந்த ஊற்றை, அல்லது எழுச்சியைச் சிறந்த வழிமுறைகளால் சோபிக்கச் செய்யத் தூண்டி விடுகிற ஒன்றுதான் குருவின் பணியே அன்றி; சீடனைத் தேடிச்சென்று, வித்தையின்மீது அவனுக்கு

ஆவனலையும் புகட்டுவது அல்ல ஆசானின் வேலை என்பது அவர் கருத்து.

'எங்கோ காட்டிலிருக்கும் வண்டு, தேடி வந்து தாமரையிலுள்ள தேனைச் சுவைத்துவிட்டுச் செல்கிறது. ஆனால், அதே தடாகத்தில் தாமரை இலை மேலேயே அமர்ந்திருக்கும் தவளைக்கு, அருகிலிருக்கும் பூவின் அருமையோ, தேனின் சுவையோ புரிவதில்லை என்றால் அது மலரின் குற்றமா?' பாகவதர் இப்படி தன்னைச் சமாதானம் செய்து கொண்டார்.

நாடாவில் பதிவாகியிருந்த கிடார் வாத்திய இசை, 'லைக் ஸம் ஒன் இன் லவ்' என்கிற 'கோனி பிரான்சிஸின்' பாடலை மென்மையாக ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. அதை ரசித்துக் கொண்டிருந்த பாபு, வாசலில் கார் வந்து நிற்கிற ஓசையைக் கேட்டுக் கைக் கடிகாரத்தைப் பார்த்த படி சட்டென்று எழுந்து வேகமாக வெளியே வந்தான்.

டாக்ஸியிலிருந்து இறங்கிய டேவிட்டையும் சோபியாவையும் பாபு வரவேற்றான்.

சிரித்தபடியே அவர்கள் பாபுவின் அறைக்குள் நுழைந்தனர். டேப் ரிகார்டர் ஒலித்துக் கொண்டிருந்தது. பாபு ஒரு பெரிய கம்பெனியின் உயர் அதிகாரி.

''உங்களுக்கு கிடார் ரொம்பப் பிடிக்குமோ?'' என்றான் டேவிட்.

''நான் கிடாருக்காகப் போடல்லே; பிடிச்ச ஒரு 'ஹிட் ஸாங்கை', இன்ஸ்ட்ருமெண்டல்லே கேக்கறது ஒரு டேஸ்ட் இல்லையா? எனக்கு 'கோனி பிரான்ஸி'னுடைய பாட்டு ரொம்பப் பிடிக்கும்.''

''அப்படியா? சோபியா கூட 'கோனி'யோட விசிறி தான்; ஒரு 'கான்செர்ட்'டையும் விடமாட்டாள்'' என்று

சோபியாவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டியபடி கூறினான் டேவிட்.

''இஸ்...இட்...?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பாபு.

''ஆமாம்; சோபியா சில குறிப்பிட்ட பாட்டுக்களைப் பாடினால், நிச்சயம் உங்கள் மனக்கண் முன் 'ஜாக்ஸனும்' 'கோனி'யும் அப்படியே வந்து நிற்பார்கள்!''

பாபு மகிழ்ச்சியில் மூழ்கிப் போனான்.

''அப்படியானால் நான் அதிர்ஷ்டசாலிதான். இன்று சோபியாவை நான் லேசில் விடப்போவதில்லை!'' என்று பாபு கூறிக்கொண்டிருக்கும்போதே, டேவிட் கைக் கடியாரத்தைப்பார்த்துவிட்டு, ''புதன்கிழமை, சார் ஊரிலிருந்து வந்து விடுவார். டவுனுக்குப் போய்க் கொஞ்சம் தம்பூரா தந்தி வாங்க வேண்டிய வேலை இருக்கிறது. நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்; நான் சீக்கிரம் வந்து விடுகிறேன்'' என்று எழுந்தான்.

உடனே பாபு, ''பேச்சாவது... மூச்! நான் சோபியாவைப் பாடச் சொல்லி 'ரிகார்ட்' பண்ணப் போகிறேன். நீங்களும் சீக்கிரமாக வந்து விடுங்கள்'' என்றான்.

டேவிட்டை வாசல்வரைச் சென்று அனுப்பிவிட்டு பாபு உள்ளே வந்ததும் கல்யாணி அம்மாள், ''டேவிட் எங்கே பாபு?'' என்று கேட்டாள்.

''அப்பாவுக்குத் தம்புரா தந்தி வாங்க டவுனுக்குப் போயிருக்கிறான்,'' என்றான்.

''அப்படியா,'' என்ற கல்யாணி அம்மாள் சோபியாவின் அருகே உட்கார்ந்து ஆசை தீர, மனம் விட்டுப்பேசிக் கொண்டிருந்தாள். இறந்து போன தன்மகள் உயிரோடு இருந்தால்—இந்த சோபியா வயதுதான் இருக்கும். பொங்கி வந்த கண்ணீரை மறைத்தபடி உள்ளே போய்

காப்பி போட்டுக் கொண்டு வந்தாள். மறுக்காமல் சோபியா, இரண்டு கையாலும் வாங்கிக் குடிக்கிற அழகைப் பார்த்து ரசித்தபடி அவள் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு உள்ளே புறப்பட்டாள்.

அப்போது பாபு சட்டென்று, "அம்மா, அப்படியே கொஞ்சம் அந்தச் சேர்லே உட்காரும்மா..." என்று ஓர் உத்தரவு போல் கூறிவிட்டு, டேப்பை, ரிகார்டரில் நூறு அடி பின்னால் தள்ளி ஓடவிட்டான். அம்மாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.

"இதென்னடா கூத்து! நாங்க பேசிண்டதை எல்லாம் எடுத்து வெச்சிருக்கே!"

"சும்மா ஒரு டெஸ்ட் அம்மா. ஏன் சோபா? அம்மா வோடு வாய்ஸ் மைக்குக்கு ரொம்ப ஸ்யூட்டா இருக்கு இல்லே...?"

"போடா, நீயும் உன் போக்கிரித்தனமும்!" என்று அம்மா உள்ளே போய்விட்டாள்.

"நீங்க அந்தப் போர்ஷனை 'எர்ரேஸ்' பண்ணப் போறீங்களா?" என்று கேட்ட சோபியாவை பாபு ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

"ஏன்? அம்மா பேச்சு உனக்கு வேணுமா?"

"ஆமாம். நான் அதை ஊருக்கு எடுத்துக் கொண்டு போகிறேன். ஒரு மெமொரி."

பாபு கடகடவென்று சிரித்தான்

"கவலைப்படாதே. உனக்கு 'போர்' அடிக்கற வரை அம்மாவைப் பேசச் சொல்லி, ஒரு முழு டேப்லே ரிக்கார்ட் பண்ணித் தரேன். இப்போ...ப்ளீஸ்...நீ பாடு."

"என்ன பாட? ஜாக்ஸனோட ஒரு ஹிட் ஸாங் பாடவா?"

"முதல்லே கோனியோட ஒரு பாட்டுப் பாடு. 'வேர் கேன் ஐ கோ வித் அவுட் யு'—தெரியுமா?"

"நல்லாத்தான் ஸெலக்ட் பண்ணி வெச்சிருக்கீங்க. முதல்லே, 'யு காண்ட் டேக் இட் ஃப்ரம் மீ'ங்கற பாட்டுப் பாடறேன். ரொம்பப் பிரமாதமாயிருக்கும்!"

"ப்ரொஸீட்."

அவன் ரிகார்டிங் பண்ணுவதில் முனைந்தான். சோபியாவின் நீலநிற விழிகள் 'மைக்'கை மொய்த்துக் கொண்டிருந்தன. அவள் தன்னையே மறந்து இசையிலே ஒன்றிப் பாடிக் கொண்டிருந்தாள். அந்த அறை முழுவதும் அவள்குரலால் மணத்தது. எங்கோ ஒரு பெரிய வெஸ்டர்ன் கான்ஸர்ட் ஹாலின் நடுவே இருப்பது போலவே பாபுவுக்குப் பிரமை தட்டியது. அவனது விரல்களிலே 'ட்ரம்பெட்'டின் வேகம் துடித்துக் கொண்டிருந்தது.

பாட்டை முடித்துவிட்டு, அவள் தன் விழிகளை அவன் பக்கம் திருப்பியபோது பாபு தன்னையும் மீறி, "மார்வலெஸ்...மார்வலெஸ்" என்று கை தட்டினான், ஸ்விட்சை 'ஆஃப்' செய்வதையும் மறந்து. ஆனால்—

சோபியா பிரமை பிடித்தாற்போல் தன்னையே வெறிக்கப் பார்த்துப் கொண்டிருக்கவும்; "ஏன் சோபா இப்படிப் பார்க்கறே?" என்று கேட்டான் பாபு, ஒன்றும் புரியாமல்.

அவள் கூறினாள்: "உங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேன்."

"என்னைப் பற்றியா?" என்றான் பாபு ஆச்சரியத்துடன்.

"ஆமாம்; இந்த மேற்கத்திய இசையிலே பட்டம் பெற்ற நானும் டேவிட்டும், உங்கள் கர்நாடக இசையா

கவரப்பட்டு இங்கு வந்து அதைக் கற்றுக் கொள்கிறோம். இங்கே இருக்கிற உங்களுக்கு எங்கள் இசை மீது மோகமா யிருக்கிறது! இவ்வளவுக்கும் நீங்கள் ஒரு மகா வித்துவா னுடைய பிள்ளை. நல்ல 'காண்ட்ரரி'ய்யா இல்லே!''

சோபியாவினுடைய இந்தப் பேச்சு பாபுவிற்குப் பொறி தட்டினாற் போல் இருந்திருக்க வேண்டும். சற்று சூடாகவே அவனும் பதில் கூறினான்:

''என்னுடைய ஆசைகளையும் விருப்பத்தையும் - ஒரு சராசரி மனிதனுக்குரிய உரிமையோடுதான் நான் அனுப வித்து வருகிறேன். அதற்குத் தடையாக எந்த வர்ணமும் நான் பூசிக் கொள்ளவில்லை. என்னை ஒரு மகா வித்து வானுடைய மகன் என்று நீயோ, மற்றவர்களோ பெருமையாகக் கூறுவதை நான் ஆட்சேபிக்க முடியாது என்றாலும்; நான் என்னைப் பற்றி அப்படி ஒருபோதும் பெருமையாகக் எண்ணிக் கொண்டதில்லை. காரணம், இந்தக் கர்நாடக சங்கீதத்தின் மீது எனக்குப் பிரமிப்போ, பிடிப்போ இல்லாதபோது அதிலே அப்பா, மகா வித்து வானாக இருந்தால் என்ன? சாதாரண வித்வானாக இருந்தாலென்ன?''

''ஊரிலுள்ளவர்கள் எல்லாம் தன்னிடமுள்ள வித்தை யின் சிறப்பைக் கண்டு, தேடி வந்து கற்றுக்கொண்டு போய் சோபிக்கிற வேளையில்; தன் மகன் அப்படிப் பிரகாசிக்கவில்லையே என்றெண்ணுகிற ஒரு தந்தையின் ஏக்கத்தையாவது, முயன்றால் நீங்கள் போக்கியிருக்க முடியுமல்லவா?''

''ஒருவருடைய ஏக்கத்திற்காகவும், துக்கத்திற்காக வும் எல்லாம், ஒரு தொழிலை ஏற்றுக் கொள்ள முடியுமா? அவருடைய புகழ் பரப்ப உங்களைப் போல் அவருக்குப் பலர் இருக்கிறார்களே? போகட்டும், எனக்கென்னவோ பாப் மியூசிக்லே இருக்கிற பிரமையிலே பாதிகூட இந்தக் கர்நாடக இசையிலே ஏற்படலேயே?''

"அது உங்கள் தலைவிதி!"

"அதற்கு நான் என்ன செய்ய முடியும், சோபியா?"

"நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்! கண்ணை மூடிக்கொண்டு, முதலில் கழுத்தில் தொங்குகிற பிளாஸ்டிக் மாலையைக் கழற்றி எறிந்துவிட்டு, தலையை கிராப் பண்ணிக் கொண்டு வாருங்கள். 'ஐ ஹேட் யுவர் ஹிப்பி ஸ்டைல்', இப்படிக் கூற எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்பீர்களானால், நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள்; நான் என் பேச்சை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். 'வால்ட் விட்மனையும்', நோபல் பரிசு பெற்ற கவிஞர் 'எலியட்'டையும் போன்ற எத்தனையோ மேலை மேதைகளை இந்தியக் கலாசாரம் கவர்ந்திருக்கிறது. மேற்கு கிழக்கை நோக்கி வந்து கொண்டிருக்கும் காலம் இது. சூட்டும், கோட்டும் அல்ல; பாண்ட்டும், ஸ்லாக்குமே பிடிக்காமல், ஜிப்பாவும், வேட்டியுமாகக் காட்சியளிக்கும் டேவிட், கிராப்பைத் துறந்து குடுமி வைத்துக் கொள்வதைப் பற்றி யோசித்துச் கொண்டிருக்கும்போது, நீங்கள் ரிப்பன் வைத்துப் பின்னலாம் போல் முடி வளர்க்கிறீர்களே?"

சோபியாவின் வேகம் நிறைந்த, நீண்ட பேச்சைக் கேட்டு, ஒரேயடியாகக் குழப்பிப் போய், ஏதோ பலத்த சிந்தனை வயப்பட்டு உட்கார்ந்திருந்த பாபு, சிறிது நேரம் வரை பேசவேயில்லை. அவன் மனம் ஒரேயடியாக குழம்பிப் போயிருந்தது. அதுவரை கண்ணுக்குப் புலப்படாதிருந்த ஏதோ ஒன்று புலப்படுவது போலிருந்தது.

"புறப்படலாமா சோபியா?" என்று கேட்டுக் கொண்டே சற்றைக் கெல்லாம் உள்ளே நுழைந்த டேவிட் பாபு இருக்கிற நிலையைப் பார்த்து, "என்ன, சோபியாவோடு 'கோனி'பாட்டைக் கேட்ட மயக்கம் இன்னும் தெளியவில்லையா? இந்த 'பாப் மியூசிக்' என்ன, சில

பேவரிட் 'பாஃக் ஸாங்ஸ்' 'கோப்ஸெல்'ஸையும் கேக்க ணும். 'ப்ளூஸ்'ஸோட, 'யூ ஸ்டெப்டு அவுட் ஆஃப் எ ட்ரீம்' என்கிற ஒரு பிரமாதமான பாட்டிலே, சோபியா வோட சில அபாரப்பிடிகளைக் கேட்டால் அசந்து போய் விடுவீர்கள் பாபு'' என்று கூறி முதுகில் தட்டிக் குஷிப் படுத்தினான் டேவிட்.

ஆனால் பாபு இழந்த உற்சாகத்தை மீண்டும் பெறவேயில்லை. 'யூ ஸ்டெப்டு அவுட் ஆஃப் எ ட்ரீம்' என்று லேசாக அவனது உதடுகள் முணுமுணுப்பதைக் கண்டு சிரித்துக்கொண்டே, டேவிட் விடைபெற்றபடி காரில் ஏறிக் கொண்டான். சோபியா இயந்திரம் போல் அவன் பின்னே சென்றாள்.

பாகவதர் ஊரிலிருந்து வந்ததும் பாடத்திற்கு வந்தி ருந்த டேவிட்டிற்கும், சோபியாவிற்கும் மிகப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது!

கழுத்து மாலையைக் கழட்டி எறிந்துவிட்டு 'டீ'க் காகக் கிராப் செய்து கொண்டிருந்த பாபு, வேட்டி, சட்டையுடன் கம்பெனிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந் தான். பாபுவினுடைய இந்த மாறுதல் சோபியாவி னுடைய உள்ளத்தில் 'சுரீர்' என்று தைப்பது போலிருந் தாலும், அந்த வலி அவளுக்கு இதமாகவே இருந்தது. 'தன்னுடைய வார்த்தைக்கு பாபு இவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறானா?' என்று எண்ணிப் பார்த்தபோது அவளுக்குக் கண்ணில் நீரே வந்து விட்டது. ஆனால் அந்தக் கண்ணீரின் கடையிலே ஒரு துளி நம்பிக்கைக் கீற்றும் ஒளி விடுவது போல் சோபியா உணர்ந்தாள்.

அன்று பாடம் முடிந்து அவர்கள் ரூமிற்குச் சென்ற போது 'கேபிள்' ஒன்று காத்திருந்தது. டேவிட்டையும், ஸோபியாவையும் உடனே புறப்பட்டு வரும்படி. சோபியா, அப்போது புறப்பட விரும்பவில்லை. ஆனால்

டேவிட் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப் பட்டான்.

கல்யாணி அம்மாளுக்கு அன்று சமையலில் யுத்தியே லயிக்கவில்லை. எப்படியும் இன்று சோபியாவையும் பாபுவையும் பற்றி தன் மத்திலுள்ளதைக் கணவரிடம் கேட்டுவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது கணவரே அடுக்களைக்கு வந்ததும் கல்யாணி அம்மாளுக்குக் கையும் காலும் ஓடவில்லை! சாதாரண மாக அங்கு அவர் வரக்கூடியவரல்ல.

'என்ன வேண்டும்?' என்று கேட்கக் கூடத் தோன் றாமல் அவள் தவித்துக் கொண்டிருந்தபோது பாகவதரே பேச்சை ஆரம்பித்தார். "உன் கிட்டே தனியா ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி அபிப்பிராயம் கேக்க ணும்னு யோசிச்சிண்டே இருக்கேன். இன்னிக்குத்தான் அதுக்குச் சமயம் வாய்த்தது."

"சொல்லுங்கோ!"

"எப்படிச் சொல்றதுன்னுதான் புரியலே. நான் சொல்றது உனக்குப் புரியலேன்னா—அதாவது - பிடிக்கல் லேன்னா, ஒரேயடியா மறுத்திடுவியோ?"

கல்யாணி அம்மாளுக்குப் புரிந்துவிட்டது. அவரும் தன்னைப் போலவே ஒன்றை மனத்தில் வைத்துக்கொண்டு தான் சுற்றி வளைக்கிறார் என்று. ஆனாலும் அது அவர் வாயாலேயே வரட்டுமே என்றுதான் காத்திருந்தாள்.

"டேவிட் போயிட்டான்; இனி சோபியாவும் ஊருக்குப் போயிட்டா, என்னாலே அந்தப் பிரிவைத் தாங்கவே முடியாது போலிருக்கு."

"அதுக்கு, நாம என்ன செய்ய முடியும்? வித்தை கத்துக்க வந்தவா எத்தனை நாளைக்குத்தான் சொந்த

ஊரை, மனுஷாளை விட்டுட்டு நம்மோட இருக்க முடியும்?'' கல்யாணி அம்மாள் அமைதியாகவே கூறினாள் பாகவதருக்குக் கோபமே வந்து விட்டது.

''உனக்குக் கொஞ்சம்கூட ஞானமே இல்லேடி. சோபியாவைப் பார்க்கற போதெல்லாம் நம்ப ராஜி ஞாபகம் வர்றதுன்னு எங்கிட்டே வந்து அழுவையே?''

''இப்போ ட்டும் இல்லியா?''

''இருந்தா, அவள் ஊரை விட்டுப் போயிட்டா என்ன பண்ணறதுன்னு கவலைப்படாம இப்படிப் பேசுவியா?''

''நான் கவலைப்பட்டு என்ன பண்ணறது? அவளை பாபுவுக்குப் பண்ணி வெச்சு பெற்ற பெண்ணாட்டமா, பக்கத்திலேயே இருத்திக்கணும்னு தான் எனக்கும் ஆசை.''

''அதைத்தான் கேட்கறேன். இதைச் சொல்ல இவ்வளவு நேரமாடி? இப்ப நான் உன் இஷ்டப்படி அதுக்கு ஒரு வழி பண்ணப் போறேன்.''

''என்ன பண்ணப் போறேள்?''

''எனக்கு ஒரு வரம் தரணும்னு கேட்பேன்.''

''வரமா...?''

''ஆமாம். நான் அவளுடைய வித்தைக்குத்தான் குருவே தவிர, அவளோட சொந்த வாழ்க்கையைப் பத்தி அதிகாரம் பண்ண என்ன உரிமை இருக்கு? ஒரு வேண்டுகோள் தான் செய்யலாம்.''

''செய்தேளா...?''

''அதுக்குத்தான், முதல்லே இப்போ உன்கிட்ட வந்திருக்கேன்.''

"எதுக்கு? வரம் கேக்கவா...?" கல்யாணி அம்மாள் கலகலவென்று சிரித்தாள்.

"குறும்பு உன்னைவிட்டு எங்கேடீ போகும்?" அத்தனை வயசுக்கப்புறமும் பாகவதர் மனைவியின் தலையில் செல்லமாக ஒரு குட்டுக் குட்டினார்.

"ஐயா..." சிந்தனை கலைந்த பாகவதர் தலை நிமிர்ந்தார். எதிரே சோபியா உதயசந்திரன் போல் நின்று கொண்டிருந்தாள். தலையின் ஈரத்தை உறுஞ்சக் கட்டிக் கொண்டிருந்த மலையாளத்து ஈரிழைத் துண்டு இப்போது இல்லை. அழகாக வாரிக்கொண்டு தலையில் மல்லிகைப்பூ வைத்துக் கொண்டிருந்தாள். அது அறையெல்லாம் மணத்தது.

அருகிலிருந்த சோபியாவிடம், "இந்தத் திருக்கார்த்திகையின் போது அகல்விளக்கு ஏத்தறாளே? அப்போ உனக்குப் புதிசா ஏதாவது தோணறதா? நீயும்தான் பார்த்திருப்பியே?" என்று கேட்டார்.

"ஆமாம், குழந்தை அவள், அவளைப் போய் பெரிய பெரிய கேள்வியெல்லாம் கேளுங்கோ; எனக்கே புரியலே..." என்று கல்யாணி அம்மாள் வக்காலத்து வாங்கினபோது பாகவதர் சட்டென்று குறுக்கிட்டுக் கூறினார்:

"உனக்குப் புரியலேன்னா, ஒருத்தருக்கும் புரியாதுங்கறது உன் நினைப்புப் போலிருக்கு! நான் என்ன புராணக் கதையா கேக்கறேன்? கண்ணாலே பார்க்கிற போதே ஞானோதயமாகிற மாதிரி ஒரு பெரிய தத்துவம் புலப்படலியோ?"

"சொல்லுங்கோ ஐயா, தெரிஞ்சுக்கறேன்." சோபியாவின் இந்த பதில் கல்யாணி அம்மாளுக்குத் திருப்தியாக இருந்தது. பாகவதர் விளக்கினார்:

"அதாவது, முதல்லே நாம் ஏத்திண்ட ஓர் அகல் விளக்கைக் கையிலே எடுத்துண்டு, வரிசையா இருக்கற விளக்குக்கெல்லாம், ஒண்ணிலேருந்து இன்னொண்ணு, அதிலேயிருந்து இன்னொண்ணு, இப்படிப் பத்து நூறு, ஆயிரம், லட்சம்னு ஏத்திண்டே போக; எங்கும் ஜெகத் ஜோதியாய், ஒளி வெள்ளமாய்த் திகழ்கிறபோது; கையிலே இருந்ததைக் கீழே வெச்சுட்டா, அந்த ஆதி முதல் விளக்கு, எங்கே எதோட கலந்து போச்சுன்னு யாருக்காவது புரியுமோ; இல்லே, பிரிச்சுக் கண்டுபிடிக்கத் தான் முடியுமோ?

"எப்படி ஓர் அகல் விளக்குக்குள்ளே லட்சம், பத்து லட்சம், கோடி அகல் விளக்குகள் அடங்கியிருந்ததோ; அப்படி அந்த லட்சமும், கோடியும், புதிதாய் பிறந்தஅந்த ஓர் அகல் விளக்குக்குள்ளேயும்அடக்கமில்லையா? இப்படித் தான் கலைகளின் வளர்ச்சியும். ஒண்ணிலேருந்து, ஒருத்தரி லேயிருந்து கோடானு கோடி."

பாகவதர் கூறியதை அவர்கள் சிரத்தையோடு கேட்டுக் கொண்டிருக்கும்போது, "சார், போஸ்ட்" என்கிற தபால்காரரின் குரல் கேட்டு சோபியா வேகமாகத் திண்ணைக்குச் சென்று கடிதத்தையும், ஒரு பாக்கெட்டை யும் கையெழுத்திட்டு வாங்கி வந்தாள்.

"எங்கேயிருந்து வந்திருக்கு?"

"அமெரிக்காவிலிருந்து."

"யார், பாபு எழுதியிருக்கானா...?" கல்யாணி அம்மாள் ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

"கொஞ்சம் பொறு. அவள் கவரை உடைக்கட்டும்."

"உங்கள் சிஷ்யர் டேவிட் எழுதியிருக்கிறார் ஐயா." சோபியா கூறினாள்

"என்ன எழுதியிருக்கான்?"

''உங்க ஆசியினாலே 'வெஸ்லயன்' பல்கலைக்கழகத்திலே கர்னாடிக் மியூசிக் லெக்சரர் உத்தியோகம் கெடச்சிருக்காம்.''

''பேஷ்...பேஷ்...அப்புறம் என்ன எழுதியிருக்கான்?'' பாகவதருடைய குரலில் ஆர்வமும், மகிழ்ச்சியும் உச்ச நிலையில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தன.

''நான் அடுத்த மாசம் அமெரிக்கா புறப்பட்டு வர்றதா எழுதியிருந்த கடிதம் கிடைத்ததாம். இது ஒன்றுதான்...'' என்று சோபியா கூறிக் கொண்டிருக்கும் போதே, ''அதிருக்கட்டும், நாங்கள் உன்னை இங்கிருந்து அனுப்பினான்னா நீ அமெரிக்காப் போகணும்?'' என்று சிரித்தபடி அவளிடம் கூறிய கல்யாணி அம்மாள், ''நிறைய எழுதியிருக்கே...டேவிட் வேறே யாரைப்பத்தி இன்னும் எழுதியிருக்கான்?'' என்றாள்

''உங்கள் பிள்ளையைப் பத்தித்தான்!'' சோபியா சமாளித்தாள்.

''ஏன், பாபு தன் கைப்பட ஒண்ணும் எழுதல்லியா?'' கல்யாணி அம்மாவுக்குத் தன் பிள்ளையின் கையெழுத்தைப் பார்க்க வேண்டும்போல் இருந்ததோ என்னவோ? அந்தத் தாயின் அளவு கடந்த ஆவலை ரசித்தபடியே, ''நிறைய எழுதியிருக்கிறார்!'' என்றாள் சோபியா.''

''என்ன எழுதியிருக்கான்?''

''உங்க பிள்ளை இப்போது அமெரிக்காவிலே நிறைய எடங்களிலே கர்நாடக சங்கீதக் கச்சேரி பண்ணறாறாம்.''

சோபியா இந்த வார்த்தைகளைக் கூறி முடிக்கு முன்னர், ''என்ன? சரியாப் பாத்துப் படி'' என்று பரபரப்புடன் கூறினார் பாகவதர். கடிதத்தில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்பது அவர் எண்ணம்.

''கடிதத்தில் அப்படித்தான் எழுதியிருக்கிறது, 'மிடில் டவுன்', 'மான்செண்டர்', 'கன்னெக்டிக்ட்', 'சிகாகோ' இங்கே எல்லாம் அவர் பாடின கச்சேரியைப் புகழ்ந்து பத்திரிகைகளில் வந்திருக்கிறதாம். அந்த பேப்பர் கட்டிங்கையெல்லாம் டேவிட் அனுப்பியிருக்கிறார்.''

ஆச்சரிய மிகுதியால் பாகவதர் பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டார் சாப்பிட எடுத்த கவளம் அப்படியே கையில் இருந்தது. 'பாபுவாவது கச்சேரி பண்ணுவதாவது? இங்கிலீஷ் பாட்டுக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தவன் யார்கிட்டே, எப்போது இந்த சங்கீதத்தைக் கற்றுக் கொண்டான் ''

''ஏன் சோபா, பாபு ஏதோ வியாபார சம்பந்தமான ரெண்டு வருஷ படிப்புக்குன்னா அமெரிக்கா போறதாச் சொல்லிட்டுப் போனான்?'' என்று கேட்டாள் கல்யாணி அம்மாள்,

''வியாபாரத்துக்காகவும் தான் போனார். ஆனால் அங்கே டேவிட், தன்னோட செல்வாக்கினாலே பாபுவுக்கு நிறையக் கச்சேரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்.''

''ஏற்பாடுகள் செய்யறது இருக்கட்டும். கச்சேரி பண்றதுக்கு இவனுக்கு என்ன தெரியும்?''

''கொஞ்சம் முன்னே நீங்கள் அகல் விளக்கு தத்துவம் சொல்லவில்லையோ, அதுதான் உங்கள் பிள்ளையின் வாழ்க்கையிலேயும் நடந்திருக்கிறது. உங்களுடைய அந்த வாரிசு வரிசையிலே வந்திருக்கிறவர்தான் ஐயா பாபுவும்.''

சோபியாவினுடைய இந்த பதில் பாகவதருக்குப் புரிவது போலவும்; புரியாதது போலவும் இருந்தது.

''கொஞ்சம் விவரமாகச் சொல்லேன் சோபா. என்றார் பாகவதர்.

''தயவு செய்து என்னை மன்னியுங்கள் ஐயா, உங்களிடம் சொல்லக் கூடாது என்கிற எண்ணமில்லை. ஆனால், அதற்கான துணிவு வராத காரணத்தோடு, சொல்லி ஆகவேண்டிய சந்தர்ப்பமும் இப்போதுதான் நேர்ந்தது. இன்று பாபு கச்சேரி செய்கிறார் என்றால், அது அவருக்கு யாரும் கற்றுக் கொடுத்து மாத்திரம் வந்து விட்டதல்ல என்பது என் கருத்து. காரணம், அவர் மகா மேதையான தங்களுடைய மகன். உங்களுடைய இசையும், ஞானமும், விரும்பியோ விரும்பாமலோ இயற்கையாகவே அவரது இதயத்தின் அடித்தளத்தில் முழங்கிக் கொண்டிருந்திருக்கிறது. அந்த வாயிலைத் திறந்து விடும் பணியை தூண்டிவிடும்; ஒரு கைங்கரியத்தைத் தான் நான் செய்தேனேயன்றி அவருக்கு நான் ஆசானல்ல; நீங்களே அவரது குரு ''

பாகவதருக்கு மெய் சிலிர்த்தது. சோபியா கூறிக் கொண்டிருந்தாள்:

''உங்களிடம் அவருக்கு ஏற்பட்ட வறட்டு கர்வமும், மேலை இசை மீது உள்ள மோகமும் அவரது கண்களை மறைத்திருந்தன. பாசியை விலக்கித் தெளிந்த நீரைக் காட்டியதும், அதை அவர் உணர்ந்து பற்றிக் கொண்டது தான் இறைவன் அருள். அந்தப் பற்றுதலும், அருளும் தான் அவர் மீது எனக்கு ஒரு நம்பிக்கை ஒளியை ஊட்டியது. ஆனால்...காலம் வரும்வரை, அமெரிக்காவில் டேவிட்டிடம், தான் சங்கீதம் கற்றுக் கொள்ளுவது யாருக்கும் தெரிய வேண்டாம் கொஞ்சகாலம் ரகசியமாகவே இருக்கட்டும் என்ற பாபுவின் ஆரம்ப வேண்டுகோளை என்னால் மறுக்க முடியவில்லை. எப்படியாவது அவரை இசைக் கலையில் சோபிக்கச் செய்யவேண்டும்; அதன் மூலம் உங்கள் மனப்புண் ஆறவேண்டும்; இதயம் குளிர வேண்டும்-என்கிற ஆவல்தான் என்னை பாபுவின் கோரிக்கைக்கு இணங்கச் செய்துவிட்டது.'' இதைக்கூறும்

போது சோபியாவின் விழிகளிலிருந்து வழிந்தோடிய கண்ணீர், குருவினிடம் மன்னிப்பை இறைஞ்சுவது போலிருந்தது.

பாகவதர் ஒரு தந்தைக்கு மேலான பாசத்துடன் அவளது முதுகைத் தட்டி ஆறுதல் கூறினார்.

''நீ கூறாவிட்டாலும் பாபுவின் நடை, உடை பாவனைகளில் கண்ட மாறுதலுக்கு நீதான் காரணம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்திருந்தது சோபியா. குருடனுக்கு வேண்டியது பார்வை தானே யொழிய; அது யார் மூலமா கிடைச்சா எனன? இதுக்காக சந்தோஷப் படுவதைவிட்டு யாராவது வருத்தப் படுவாளா? சரி, கையிலே, அது என்ன பாக்கெட்?''

''அமெரிக்காவில் பாபு செய்த கச்சேரிகள் சிலவற்றை டேவிட் 'டேப்' எடுத்து அனுப்பியிருக்கிறார். இதோ போடுகிறேன்'' என்று சோபியா உள்ளே சென்றாள். கல்யாணி வியப்போடு அவளையே பார்த்துக் கொண் டிருந்தாள்.

சற்றைக்கெல்லாம் டேப் ரிகார்டரிலிருந்து பிறந்த இசையைக் கேட்டு பாகவதர் ஓரேயடியாக உணர்ச்சி வசப்பட்டு பரவசமாகி போனார்.

அந்தக் குரலில் அதே இனிமை, அனாயாசமான பிடிகள், ஸ்வரக்கோர்வைகள். இளமை முறுக்கேறிய தன்னுடைய வாலைப் பருவத்தில் கொடிகட்டிப் பறந்த போது தான்பாடிய பாட்டை; மீண்டும் தானே இப்போது கேட்பது போலிருந்தது!

கல்யாணி அம்மாளுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை! உள்ளத்தினுள்ளே மகிழ்ச்சிப் பெருக் கெடுத்தோடிக் கொண்டிருந்தது. எதிரே நிற்கும்

சோபியாவை சாதாரண ஒரு மானுடப் பெண்ணாகவே அவளுக்கு எண்ணத் தோன்றவில்லை.

பாகவதர் என்னும் பெருஞ்சோதியிலிருந்து ஏற்றப் பட்ட எத்தனையோ இசை விளக்குகள் நாடு எங்கும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவர் சமீபத்தில் ஏற்றிய விளக்கான இந்த அமெரிக்கச் செல்வங்கள் செய்த கைம்மாறு—

அணையா விளக்காகப் பிரகாசிக்க; அதாவது குருவினுடைய காலத்திற்குப் பின்பும் அந்த வீட்டில் இசை மணத்து கொண்டிருக்க, ஒரு வாரிசையே அல்லவா காணிக்கையாகச் சிருஷ்டித்து விட்டார்கள்.

— தினமணி கதிர்

# ஓடும் ரயிலில் ஒரு சரணாகதி

''ஊ'' என்ற பேரிரைச்சலுடன் பம்பாய் மெயில் இருளைக் கிழித்துக்கொண்டு வேகமாகச் சென்று கோண் டிருந்தது. இரு பக்கங்களிலிருந்தும் வருகிறசிலு சிலுத்த வாடைக் காற்றும் 'கடக்-கடக், கடக்-கடக்' என்று ஒரே கதியில் ஒலிக்கிற ஓசையும், தாலாட்டுவது போன்ற வண்டி யின் சீரான அசைவும், உள்ளே இருப்பவர்களுக்கு உறக் கத்தின் போதையை ஊட்டியது.

வண்டி திருவள்ளூரில் நின்றபோது ஒரு நெரிசலான 'கம்ப்பார்ட்மெண்டில்', இளைஞனான அந்த டிக்கெட் எக்ஸாமினர் நுழைந்தான். சில நிமிஷ நேரச் சோத னைக்குள் டிக்கெட் இல்லாத ஒரு இளம் பெண்ணைக் கீழே இறக்கி நிறுத்துகிறான்.

அந்தப் பெண் மழையில் நனைந்தபடி, கையில் ஒரு தோல் பெட்டியுடன் தீவிரமாக யோசித்தபடி சற்று ஓர மாக நின்றுகொண்டிருந்தாள். தனக்கேற்பட்ட இந் நிலைக்கு வெட்கப்படுவது போலிருந்தது அவளது முக பாவம்.

டி. டி. இ. அவளை நெருங்கினான். மீண்டும் ஒரு முறை அந்த அழகியை நன்றாக உற்றுப் பார்க்கவேண்டும் போன்றதோர் ஆர்வம் அவனைத் தூண்டியது. ஆயினும் தனக்குரிய மிடுக்குடன், அதிகார தொனியில் கேட்டான்:

"என்ன உத்தேசம்? பணம் கட்டி ஊருக்குப் போறியா, இல்லே இங்கேயே இறக்கி விட்டுடவா."

"எங்கிட்டே உண்மையிலேயே கட்டப் பணம் இல்லே..."—தயங்கித் தயங்கிக் கூறினாள் அவள்.

"அப்போ இங்கே ஸ்டேஷன்லே ஒப்பிச்சிடவா?"

அவள் பதறிப் போனாள். அந்தக் கேள்வியின் பயங்கரம் தாளாமல், மானைப்போல் மருண்டுபோன அவளது விழிகளின் அழகை, அந்த மங்கலான ஸ்டேஷன் விளக்கு ஒளியிலும் அவனால் கண்டு ரசிக்க முடிந்தது.

குரல் அடைக்க அவள் கூறினாள்; "நாளைக்குக் காலமே ஊருக்குப் போகலேன்னா, எங்கம்மா பிணத்தைக்கூட என்னாலேப் பார்க்க முடியாது.—நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேன்—என்னெ இறக்கி மட்டும் விட்டுடாதீங்க..."— அவள் கெஞ்சினாள்.

அவன் தீர்க்கமாக ஒரு முறை அவளைப் பார்த்தான். "நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேன்"—அவளுடைய இந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப அந்த இளம் டி.டி.இ. யின் செவிகளில் முழங்கிக் கொண்டே யிருந்தன.

வண்டி புறப்படுவதற்கான இரண்டாவது மணியும் அடித்து விட்டார்கள். காலத்தின் அவசரம் திடீரென்று டி. டி இ.யைத் தாக்கியது. கைக்கெட்டிய தீங்கனியைக் கைப்பற்றத் துடிக்கும் ஒருவித பரபரப்பு அவனைத் துரத்தியது. 'சட்'டென்று ஒரு முடிவுக்கு வந்தவனைப்போல், "சரி, வா என் பின்னாலே" என்று அவன் வேகமாக முன்னே நடந்தான். எஞ்சினுக்குப் பக்கத்தில் காலியாக இருந்த ஒரு முதல் வகுப்புப் பெட்டியைத் திறந்து விட்டான். அவள் அதனுள் பாய்ந்து ஏறிக் கொண்டாள்.

"அரக்கோணத்தில் சந்திப்போம்" என்று பெட்டியை வெளியே பூட்டிக் கொண்டு, வேறொரு கூட்டமான

கம்ப்பார்ட்மெண்டில் டி.டி.இ. தாவி ஏறினான். வண்டி ஸ்டேஷனிலிருந்து நழுவிக் கொண்டிருந்தது.

அந்த இளம் டி. டி. இ. தன்னுடைய தொழிலின் போது எண்ணற்ற குடும்பப் பெண்களை, குடும்பமற்ற பெண்களை, பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்திருக்கிறான். ஆனால், எவரிடமும் அவன் இதுவரை காணாத ஒருவித கவர்ச்சி, அழகின் ஆகர்ஷணம், இன்னும் அவனுக்கே விளக்கத் தெரியாத செளந்தரியத்தின் சிறப்பியல்புகள் அனைத்தையும் அவளிடம் ஒருசேரக் கண்டு விட்ட பிரமை, அல்லது மயக்கம் தான், அவளை அவன் முதன் முதலாக வண்டியில் பார்த்தபோது ஈர்த்து விட்டது.

எப்படியோ ஒரு மாறான சூழ்நிலை உருவாகி அவளாகவே இப்படியோர் இணக்கம் தெரிவித்துத் தன்னிடம் வேண்டி நின்றபோது—

அவனால் ஒரு கணம் தன்னுடைய செவிகளையே நம்ப முடியவில்லை. ஓடுகிற ரயிலில் அல்ல, பறக்கிற விமானத்தில் செல்லுவது போலவே இருந்தது.

வண்டி அரக்கோணம் ஸ்டேஷனில் நின்றது. வேகமாக வி. ஆர். ரூமுக்குள் நுழைந்த அவன், சில ஸ்வீட் வகைகளையும்; பலகாரங்களையும் கட்டி வாங்கிக் கொண்டான். ஸ்டேஷனில் ஆற்ற வேண்டியிருந்த சில பணிகளையும் முடித்துக் கொண்டு, வண்டி புறப்படும் போது அவள் இருக்கும் கம்ப்பார்ட்மெண்ட்டுக்குள் ஏறிக் கொண்டான்.

அநேகமாக அவள் தூங்கிப் போயிருப்பாள் என்று எண்ணியதற்கு மாறாக விழித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வையிலிருந்து, எவ்வித விருப்பு வெறுப்புக்களையும் அவனால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆனால், சற்று முன்பு வரை அவள் எதற்காகவோ அழுது

ஓய்ந்திருக்க வேண்டும் என்பதை, துடைத்தும் மறையாத கன்னத்தில் படிந்திருந்த கண்ணீர்க் கோடுகள் லேசாக அவனுக்கு உணர்த்தியது. ஆனால், அவன் அதை கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அரக்கோணத்தை விட்டுப் புறப்பட்ட வண்டி, வேக மாய்ப் போய்க் கொண்டிருந்தது, இனி அடுத்து ஒன்றரை மணி நேரம் கழித்து—அதாவது இரவு ஒரு மணிக்கு மேல் ரேணிகுண்டாவில் தான் நிற்கும். அவனையும் பாக் கெட்டில் நிறைய வாங்கி வந்திருக்கும் ஸ்வீட்டும் காரமும் மான பலகாரங்களையும் பார்த்து ஒரு கணம் அவள் திடுக்கிட்டுப் போனாள்.

டிக்கெட்டில்லாத ஒரு பிரயாணியிடம் நடந்து கொள்ள வேண்டிய கடுமைகளைக் காட்டாமல், மரணத்தறுவாயிலுள்ள தன் தாயைச் சென்று காண உதவும்படி தான் வேண்டிக் கொண்ட ஒரு சரணா கதியைத் தவறாகப் புரிந்து கொண்டோ, அல்லது வேண்டு மென்றே தவறான எண்ணத்துடன் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதே போல் தன்னை முதல் வகுப்பு வண்டியில் ஏற்றியபோதே அவள் சந்தேகப்பட்டாள். இப்போது அவனுடைய செய்கை, அந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வது போலிருக்கவுமே, அவள் அதிர்ந்தே போனாள்.

எதிரில் இருந்த பொட்டலங்களை ஒவ்வொன்றாய்ப் பிரித்தபடி அவன் கூறினான்: ''எங்கே நீ தூங்கிப் போயி ருப்பியோன்னு பயந்தபடி வேகமாக வந்தேன். இந்தா... எடுத்துக்கோ'' பலகாரத்தை அவளிடம் நகர்த்தினான்.

அவனுடைய இந்தப் பரிவு வேண்டாததாக—விரும் பத்தகாததாக-இருந்தாலும், அது அவளுள் ஏதோ செய்தது; புறக்கணிக்க முடியவில்லை. எதற்காகாகவோ. தான் அவனிடம் கடமைப்பட்டிருப்பது போன்றதொரு

சூழ்நிலையால் தயங்கிய குரலிலேயே கூறினாள்: "அதெப்படித் தூங்க முடியும்...?"

அவளுடைய இந்த வார்த்தையைக் கேட்டதும் அவனுக்கு ஒரு வித மகிழ்ச்சி ஏற்பட்டது...

"இந்தா... இதெல்லாம் உனக்குத்தான். எடுத்துக்கோ. இங்கே நமக்குள்ளே என்ன வித்தியாசம். சேர்ந்தே சாப்பிடுவோம்—இந்தா..." கையிலிருந்த ஜாங்கிரியை அவளது வாயருகே கொண்டு சென்றான். 'சட்டென்று' அவள் தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

சற்று முன்புவரை அவன் யாரோ; அவள் யாரோ. ஆனால் இப்போது-இந்தக் குறுகிய காலத்திற்குள்-எத்தனை உரிமையுடன் இந்த டி. டி. இ. பழகத் தொடங்கி விட்டான். பார்க்கப்போனால், உண்மையில் இதற்கெல்லாம் வித்திட்டவள் அவளேயல்லவா?

'விதி ஏன் என்னை இப்படியொரு பாக்கு வெட்டியில் கொண்டு வந்து சிக்க வைத்துவிட்டது?' என்று எண்ணிய போது அவளால் துக்கம் தாளமுடியவில்லை. தன்னையும் மீறிப் பெரிதாக அழுது விட்டாள்.

டி. டி. இ. ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான். "இந்தா, இப்ப நீ எதுக்காக அழறே?"—ஓர் அதட்டு அதட்டினான்.

"நான் வேறே எதுக்காகவும் அழல்லே... அம்மா நெனப்பு வந்தது..." குனிந்தபடி வார்த்தையை மென்று விழுங்கினாள். வேறு என்ன சொல்வது என்று அவள் தவித்துப் போனாள். அவள் இப்படியொரு விபரீத அர்த்தத்துடனா சொன்னாள். அவள் ஏதோ ஒரு போக்கிற்காக 'என்ன சொன்னாலும் கேட்கிறேன்' என்று சொன்னதை அவன் இப்படி துஷ்பிரயோகம் செய்ய

முனைவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லையே! அவன் உள்ளம் நடுங்கியது.

அதற்காக திடீரென்று இறங்கி ஓடவும் முடியாது

அம்மாவைப் பார்க்க வேண்டுமானால் அவனோடு தான் பிரயாணம் செய்தாக வேண்டும்!

''உன் அம்மாவுக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. தைரியமா யிரு. ஆமாம்...இவ்வளவு நேரமா நீ உன் பெயரைச் சொல்லவே இல்லையே உன்பெயரென்ன? எந்த ஊர்?

அவள் தலை நிமிர்ந்து அவனை ஒரு முறை பார்த்தாள். பிறகு நிதானமாக, பேரை மட்டுமல்ல, தனது வாழ்க்கைக் கதையே ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து ஆரம்பித்து, ஒரு சுவாரஸ்யமான கட்டம் வரை மிகச் சுருக்கமாகவும், மனத்தில் பதியும் படியும் தெளிவாகக் கூறிக் கொண்டிருந் தாள். அவன் அவளது முகத்தையே ஆவலோடு பார்த்த படி சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'குத்தி அருகே உள்ள ஓர் ஆத்திரக் கிராமத்தில் பிறந்தவள் அவள். பெற்றோருக்கு ஒரே மகள். சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்ட அவளை எவ்வள வோ கஷ்டங்களுக்கு மத்தியில் தாயார் தான் படிக்க வைத்து ஆளாக்கினாள். திருமணத்திற்கான ஏற்பாடுகள் ஏனோ கடந்து கொண்டே போய்; அதற்காக இருந்த சொல்ப நிலத்தையும் விற்றுச் சாப்பிட்டாயிற்று.

குடும்பத்தின் சிரமம் காரணமாக அவளது தாய் வயதையும் மறந்து, வேலைக்குப் போய் வந்தாள். இது மகளுக்குப் பிடிக்கவில்லை. சிறுகச் சிறுக இப்படி ஓட்டை அடைத்துக் கொண்டிராமல், ஒரேயடியாக நிமிர, தான் சினிமாவில் சேர்ந்து ஒரு 'ஸ்டார்' ஆகி விடுவது தான் சிறந்த மார்க்கம் என அவள் எண்ணினாள்.

சினிமாவில் சேர அளவற்ற அழகும் கவர்ச்சியும் வேண்டுமல்லா? அது அவளுக்கு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவள் அதற்காகவே பல படங்களைப் பார்த்தாள். அதில் வரும் கதா நாயகிகளின் அழகிற்கு தான் எந்த விதத்திலும் குறைந்தவளில்லை என்பது அவளுக்கு நம்பிக்கை. சினிமா உலகம் தனக்காகக் காத்திருப்பது போலவும், முயன்று பார்க்காதது தன்னுடைய குற்றமே போலவும் அவளுக்குப் பட்டது.

வெள்ளித் திரைகளிலெல்லாம், தன்னுடைய பொன்னிற மேனி ஒளி வீசுவது போல ஓர் இனிய கனவில்—பிரமையில்— அல்லது ஆழ்ந்த நம்பிக்கையில், தன் மீது உயிரையே வைத்திருக்கும் தாயாரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல்— கூறினால், நிச்சயம் குறுக்கே விழுந்து தடுப்பாள், இதற்கு அநுமதி கிடைக்காது என்பது அவளுக்குத் தெரியுமாதலால்—ஒரு சிறு தொகையுடனும், திருமணத்திற்காகச் செய்து வைத்திருந்த சொல்ப நகைகளுடனும் ஓர் இரவு சென்னைக்கு ரயில் ஏறி விட்டாள்.

சென்னைக்கு வந்து, கோடம்பாக்கம் வீதிகளில் அலைந்தபோது தான் அவளுக்குப் புரிந்தது; சினிமா உலகம் தன் வருகைக்காக ஏங்கவில்லை, அதில் சேருவது என்பது எத்தனை பெரிய விஷயம் என்று. தன்னுடைய அளவற்ற அழகையும் திறமையையும் பற்றி அவள் கொண்டிருந்த நம்பிக்கையெல்லாம் ஸ்டூடியோ மண்ணில் தவிடு பொடியாகி விட்டது.

அவளுக்குத் தாய் பாஷை தெலுங்கு, அதோடு தமிழும் பேசப் படிக்கக் கற்று வைத்திருந்தாள். பத்தாவது வரை படித்ததில் ஓரளவு ஆங்கில அறிவும் அவளுக்கு இருந்தது. ஆனால்— அதனாலெல்லாம் சினிமா வாய்ப்பு அவ்வளவு சுலபத்தில் கிட்டி விடுமா என்ன?

'சினிமாவில் சேரவேண்டும் என்றால் எல்லாவற்றிற்கும் தயாராக இருக்க வேண்டும்' என்று சிலர்

சொன்னார்கள். ஆனால்—நிச்சயமாக அவள் அதற்குத் தயாராக இல்லை.

கையிலிருந்த பணமும்; கொண்டு வந்திருந்த சொல்ப நகைகளும் அந்த மூன்று மாதங்களுக்குக் கூட ஈடுகொடுக்க வில்லை. 'அடுத்த வேளைக்கு இல்லை' என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. தான் முற்றிலும் நம்பிக்கையோடு நாடி வந்த துறையைப் பற்றித் தெரிந்து கொள்ள அவளுக்கு இந்தக் கஷ்ட நஷ்டமும்; கால அவகாசமும் தேவைப்பட்டன. ஆனால் அதை ஒரு கெட்ட கனவாக. அவள் அப்போதே மறந்து விட்டாள்.

இந்தச் சமயத்தில்தான் தனது கிராமத்தைச் சேர்ந்த ஓர் அம்மாளை எதிர்பாராமல் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவளை அந்த நிலையில் கண்டதும் அந்த அம்மாளுக்கே தாளவில்லை.

''அடி பாவிப் பெண்ணே, நீ இப்படிப் பட்டணத்திலே சுத்திண்டிருக்கியே, அங்கே உன் அம்மா, நீ போனன்னிக்கு படுத்தவதான்; இப்போவோ நாளையோ உசிரை விட்டு வைக்கறதுக்குள்ளே, ஊருக்குப் போய்ச் சேருடி''— என்று அன்போடு கடிந்துகொண்டாள்.

இந்தச் செய்தி இடி போல் அவள் நெஞ்சைத் தாக்கியது. உடனே ஓடிப்போய்த் தன் அன்புத் தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு செய்த தவற்றுக் காக மன்னிப்புக் கேட்டு அழுதால்தான் மனம் ஆறும் போலிருந்தது. ஏதோ ஒரு வித வெறியில் அன்றிரவே ஸ்டேஷனுக்கு வந்து புறப்படத் தயாராக நின்று கொண் டிருந்த பம்பாய் மெயிலில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

அப்போது அவளுக்கு இந்த டிக்கெட் விஷயம் ஒரு பிரச்னையாகத் தோன்றவில்லை. 'கையில் காசில்லாத போது கவலைப்பட என்ன இருக்கிறது' என்கிற அந்த

அசட்டுத் தைரியம்— திருவள்ளூரில் டிக்கெட் இல்லாத தால் இறக்கிவிடப் பட்ட பொழுது— துகள்துகளாகி விட்டது.

'மரணத்தறுவாயில் இருக்கும், என் தாயைப் பார்க்க முடியாமலே போய் விடுமோ'— என்று அவள் தவிப்போடு கூறியதை, அந்த டி.டி.இ. இப்போது மீண்டும் ஒரு முறை நினைவு படுத்திப் பார்த்துக்கொண்டிருந்தான்.

புனிதமெனத் தான் நம்பி வந்த துறையில் சில மாற் றங்களை ஏற்க நேரிட்ட போது மனம் பதறி அவள் மறுத்து விட்டவள்.

—'அப்போதெல்லாம் குன்றாத உறுதி, பெற்ற தாய் மீதுள்ள பாசத்தில் குலைந்து விட்டதா— அல்லது நெருக் கடியான அந்த தருணத்திலிருந்து தன்னை மீட்க வேண்டு மென்கிற அவளுடைய சரணாகதியை நான்தான் தவறாகப் புரிந்துகொண்டு, பயன்படுத்த முனைந்து விட்டேனா?'—

இது ஒரு பெரும் கேள்விக் குறியாக அந்த டி.டி.இ.யின் மனக் கண்முன் எழுந்து நின்றது.

'சீ!...' என்று சிலிர்த்துக் கொண்டு எழுந்திருந்தான் அவன்.

'வாய்த்த தருணத்தை விட்டுவிடுவதா? வலுவில் தேடி வந்த இன்பத்தை அள்ளிச் சுவைப்பதை விட்டு, அர்த்த ராத்திரியில் ஏன் இந்த அனாவசியமான ஆராய்ச்சியும் மனப் போராட்டமும்?'

அவன் மெல்ல எழுந்து அவள் அருகில்வந்து நின்றான். தன்னை மறந்து அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அழகே துயில் கொள்வது போலிருந்தது அந்தக் காட்சி.

வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சுழலும் மின்விசிறியின் காற்றசைவில், கலைந்து போன அவளது முன் கேச மயிர்கள் நிலை கொள்ளாமல், நெற்றியில் வந்து விழுந்து விளையாடிக் கொண்டிருந்தன. பார்க்கப் பார்க்க அவனுள் ஒரு வித ஆவேச வெறி மூண்டது.

—'என்னை வாரி அணைத்துக் கொள்ளேன்'— என்று அந்தப் பொன்னுடல் அவனிடம் கெஞ்சித் துவள்வது போலிருந்தது. அந்த இளம் டி.டி.இ. 'பொசுக்'கென்று விளக்கை அணைத்து விட்டான். அந்த முதல் வகுப்பு கம்ப்பார்ட்மெண்ட், இருளில் மூழ்கியது.

'டொக்... டொக்'

பெஞ்சியின் மேல் பென்சிலால் தட்டுகிற ஓசை கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தாள் அவள்.

'சட்'டென்று மீண்டுமொரு முறை கண்களைக் கசக்கிக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். அவளால் வியப்பை அடக்கவே முடியவில்லை.

பொழுது நன்றாக விடிந்து, உதயசூரியனின் காலைக் கதிர்கள், அந்தக் கம்ப்பார்ட்மெண்டுக்குள் பாய்ந்து, ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. அத்துடன் முற்றிலும் அந்நியரான ஒரு புது டி.டி.இ. அவள் முன்னால் நின்று கொண்டிருந்தார். அவள் ஒரு கணம் பதறிப் போனாள். ஆனால் அவரோ—

"எக்ஸ்க்யூஸ் மி மாடம்...ஐ ஆம் ஸோ ஸாரி. காற்றிலே டிக்கெட் பறந்து கீழே விழுந்திருக்கு" என்று கீழே

இருந்து எடுத்த ரசீதைச் சரி பார்த்துக் கையெழுத்திட்டு அவளிடம் கொடுத்துவிட்டு இறங்கிச் சென்றார்.

இயந்திரம் போல், கையில் அந்த டி.டி இ. கொடுத்து விட்டுச் சென்ற ரசீதைப் பிரித்துப் 'பரபர'வென்று படித்தாள். ''சென்னை சென்ட்ரல்— டூ— குத்தி''— அவள் போகவேண்டிய ஊர் அதுதான்.

முதல் வகுப்புக்குப் பணம் கட்டியிருந்தது. எத்தனை பெரிய தொகை!

அவள் மீண்டும் ஏதோ ஒரு சக்தியால் உந்தப்பட்டவள் போல் மடித்த அந்த ரசீதை மீண்டும் பிரித்துப் படித்தாள்.

வி. சரோஜா—என்று அழகாக அதில் அவள் பெயரும் அந்த இடத்துக்கு நேரே எழுதப்பட்டிருந்தது.

வண்டி சரியாக குறித்த நேரத்திற்கு 7-20-க்கு 'குத்தி' ஸ்டேஷனில் வந்து நின்றது.

தோல் பெட்டியுடன் மூன்று மாதங்களுக்கு முன்பு ஓர் இரவில் ஏறிய அதே பிளாட்பாரத்தில் இன்று ஓர் இனிய காலை நேரத்தில் அதே தோல் பெட்டியுடன் அவள் இறங்கி நின்றாள். இந்த இடைக்காலத்திற்குள்தான் எத்தனை பொருள் இழப்பு; ஏமாற்றம், படிப்பினை!

—ஆனால் அத்தனையையும் விட, அரிதாகச் சந்திக்க நேர்ந்த ஒரு மனித ரத்தினத்தை உறக்கத்தில் கை நழுவ விட்டுவிட்ட சோதனை; அந்த மனித தெய்வத்திற்கு நன்றிக்கடன் கூடச் செலுத்தக் கொடுத்து வைக்காமற் போன வேதனைதான் அவள் உள்ளத்தைத் தகர்த்துக் கொண்டிருந்தது.

பிளாட்பாரத்தில் குறுக்கும் நெடுக்கமாய் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் மனிதக் கூட்டங்களின் மத்தியில் அர்த்தமற்று அவளது விழிகள் அவனைத் துழாயின

—'அந்த மாணிக்கத்தை இனி, நான் எங்கு காண்பேன்'—சோர்ந்து போன அவள், டிக்கெட்டைக் 'கேட்'டில் கொடுத்துவிட்டு, தன்னுடைய கிராமத்தை நோக்கிச் செல்லும் கப்பிரஸ்தாவில் இறங்கி நடந்தாள்.

வழி முழுவதும் அவள் உள்ளத்தில் ஒரே கேள்வி—

ஆரம்பத்திலிருந்து என்னிடம் ஓர் துர் எண்ணத்துடனேயே பழகத் தொடங்கியவர், பின்னர் எப்படி என்னைத் தீண்டக்கூட மனம் இல்லாதவராக—எனக்காக டிக்கெட்டையும் வாங்கி வைத்துவிட்டு, சொல்லாமல் செல்ல வேண்டும்?

நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு—அந்த டி-டி.இ.யின் உள்ளம்—அவரது மாறுதலுக்குக் காரணம்—இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவளுக்குப் புரிந்தது.

—ஒரு நிர்ப்பந்தத்திலிருந்து மீள அல்லது விடுபட, வேறு வழியற்று மனமொடிந்த நிலையில் தன்னை அர்ப்பணித்த எனது 'சரணாகதி'யைப் பயன்படுத்திக்கொள்ள அவர் விரும்பவில்லையோ? ஏதோ ஒரு பலவீனமான மனோ நிலையில்—அவர் செய்யத் துணிந்தவற்றை—நான் கூறிய வாழ்க்கைக் கதைதான் என்னுடைய தரத்தை விளக்கி, அவரது எண்ணத்தை மாற்றி விட்டதோ?—

—அவளுடைய கேள்விகளுக்கு விடை கிடைத்து விட்டது.

ஆம்! இத்தனை காலம் அவள் தன்னுள் போற்றிக் காத்துவரும் 'அது'—பெண்மைக்கோர் பொக்கிஷமான அந்த 'அது' எத்தனை மகத்தானது, 'சக்தி வாய்ந்தது, சத்தியமானது' என்பதை எண்ணியபடி பெருமிதத்துடனேயே தன் அன்னையைக் காண விரைந்தாள்.

—ஆனந்த விகடன்

# ஒரு கிளைப் பறவைகள்

காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த காசிராஜனின் விழிகள், தயார் நிலையில் இருந்த ஜாக்கிரதை உணர்வுகளை மீறி அல்லது ஏமாற்றி, எப்படியோ ஒரு கணத்தில் அந்த நடைபாதை விளம்பரத்தை மேய்ந்து விட்டன. இது அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிதான்.

அந்தச் சிகப்பு முக்கோணத்தின் கூரிய முனைகள் என்னவாகத்தான் நெஞ்சை நெருடுகின்றன! கோணத்துக்குச் சிவப்பு வர்ணம் பூசியிருக்கிறார்கள். அளவுக்கு மீறிப் பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொண்டால் தொல்லை என்று எச்சரிக்க. ஆனால் தொல்லையும் துயரமும் அளவை மீறுபவர்களுக்கு மட்டுந்தானா? அளவையே அடைய முடியாதவர்களுக்கு?

மணவாழ்வினைப் பெற்றும், மழலை இன்பம் காணாமல் - அதாவது காண இயலாமல் - அந்த அன்புக் கனிக்காகவே வாழ்நாளெல்லாம் ஏங்கித் தனிமரமாகவே நிற்பது வேதனை அல்லவா? குடும்பப் பெண்ணொருத்தி இதனால் அடையும் துயரத்தின் ஆழம், அதன் தன்மை, உரிமையுள்ளவர்களிடமிருந்து அவள் சுமக்கும் சுடு சொற்கள், ஏற்கும் அநுதாபப் பார்வைகள், பட்டங்கள் இவற்றையெல்லாம் புரிந்து கொண்டதனாலேயே—அப்படிப்பட்ட குற்றவாளிகளில் ஒருவனும் ஒருத்தியுமாக,

அவனும் அவளும் இருப்பதனாலேயே—காசிராஜனுக்கு அந்த விளம்பரத்தின்மீது ஒருவித வெறுப்பு.

வெறுப்பு என்று சொல்வதைவிட இன்னும் உண்மையாக அல்லது பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால்; அந்தச் சிகப்பு முக்கோணத்தின்மீது அவனுக்கு ஒருவிதப் பொறாமை என்றே சொல்ல வேண்டும்.

ஆம்! கவலை கொள்ளுமளவுக்குப் பெருகும் இனப் பெருக்கு தன் வரையில் ஏன் தேங்கிவிட வேண்டும்? பிரச்னையாகி, நடைபாதைகளிலெல்லாம் விளம்பரமாக எச்சரிக்கிற அளவுக்கு சுலபமாகக் கிட்டும்—அல்லது பெருகிவிட்ட ஒரு விஷயம் தங்களுக்கு மட்டும் ஏன் அரிதிலும் அரிதாகி விட வேண்டும்? படைக்கத் தெரிந்தவன், அதைப் பாரபட்சமின்றிப் பகிர்ந்து கொடுக்காத குறைக்கு அல்லது குற்றத்துக்கு யாரைச் சாடுவது? இறைவனின் இந்த ஓரவஞ்சனைக்கு—மனிதர்கள் இங்கு ஒரு மூலையில் வீங்கி வெடிப்பதும், ஒரு மூலையில் ஏங்கிச் சாவதுமா?—அவன் குமுறினான்.

அன்று ஏனோ நேராக வீட்டுக்குப் போகக் காசிராஜனுக்கு மனம் இல்லை. பெரிய தெருவிலிருந்து. மடத்துத் தெரு வழியாக வந்தவன், வலப் புறம் பச்சையப்பன் தெருவிலுள்ள தன் வீட்டுப் பக்கம் திரும்பாமல், நேராகக் காவிரியை நோக்கி நடந்தான்.

நதியில் நீர் இல்லை. அகன்ற மணற்பரப்பின்மீது, திட்டுத் திட்டாகக் குழுமியிருந்த மனிதக் கூட்டம், அவர்களைச் சுற்றிலும் பரவலாக விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் - இவர்களைக் கடந்து, சற்று ஒதுங்கித் தனியானதோர் இடத்தில் சென்று உட்கார்ந்து கொண்டான் காசிராஜன் .

மனைவி சாந்தா ஊரில் இல்லை. ஊருக்குச் சென்றவளிடமிருந்து-அல்ல- ஊருக்குப் பலவந்தமாக அனுப்பப்

பட்டவனிடமிருந்து-எவ்விதத் தகவலும் இல்லை. என்ன பதிலுடன், என்று இங்கு புறப்பட்டு வருகிறாளோ?

'சரக், சரக்' என்று ஆற்று மண்ணில் நடந்து வந்ததில், 'ஸாக்ஸை'யும் தாண்டி உள்ளே புகுந்து உறுத்திக் கொண்டிருக்கும் மணலைக் களையப் பூட்ஸைக் கழற்றிக் கொண்டிருந்தவன், "ஏண்டா ராஜா, நாலு நாழியாக் கூப்பிடறேனே, காதிலே விழல்லியா?" என்ற பழக்கமான குரலைக் கேட்டுத் திரும்பினான் காசிராஜன். அங்கு யாரும் இல்லை; ஆனால்...

காலையில். பூட்ஸைக் காலில் திணித்துக் கொண்டு அலுவலகத்துக்குப் புறப்படும்போது, அம்மா அருகில் வந்து இப்படி அழைத்ததும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதங்களும் அவன் நினைவில் மோதிச் சிதறின,

"ஏண்டா ராஜா, இப்படிப் பதிலே பேசமாட்டேங்கறே? அந்தப் பெண் ஊரிலேருந்து வர்றதுக்குள்ளே நாம இந்த இடத்தைப் போய்ப் பார்த்துட்டு வந்துடலாமில்லியா?

"..—"

"ரொம்ப ஏழைப்பட்ட இடமா இருந்தாலும், கொப்பும் கிளையுமா, நிறையப் பெருகி வர்ற சம்சாரியான குடும்பம். பணமும் காசும் நமக்கு எதுக்கு? கல்யாணி ரொ‌ம்ப நல்ல பொண்ணு."

"அம்மா!"

அதட்டியபடி, காசிராஜன் தன் தாயை முறைத்தான் அந்தக் குரலின், பார்வையின் வேகத்தை ஜீரணிக்க, பதிலுக்கு இரைந்தால்தான் முடியும் போலிருந்தது.

"பின்ன நீ என்னதாண்டா நெனைச்சிண்டிருக்கே? இப்படி எதுக்குமே வாயைத் திறந்து பதில் சோல்லாமே இருந்தா எப்படி?"

"சொல்லவா? முதல்லே, இந்த எண்ணம் உனக்கே நியாயமா இருக்கா அம்மா? சாந்தா உன் வயிற்றிலே பிறந்திருந்தா இந்த முடிவை நீயே ஒப்புக் கொள்ளு வியா?" காசிராஜனின் வாயினின்றும் சொற்கள் குமுறிக் கொண்டு வந்தன. ஆனால், அதை அவன் தாய் லட்சி யமே செய்யவில்லை.

"யார் வயிற்றில் பிறந்தா என்னடா? நியாயம் எல்லாருக்கும் பொதுதானே? என் ஒரே மகன். உனக்கு ஒண்ணு பிறந்து கண்ணாரப் பார்க்கணும்னு இந்தக் கிழ ஜீவன் ஆசைப்படறதிலே என்னடா தப்பு?"

"உன் ஆசையை நான் குறை சொல்லல்லே அம்மா; ஆனால் அதுக்காகச் சாந்தாவுக்குத் துரோகம் செய்ய நினைக்கறியே! அது பாவம் இல்லையா? அந்தக் காரியத் துக்கு என் மனசு இடங் கொடுக்கல்லேன்னுதான் சொல்லறேன்."

"இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் மனசைக் கொஞ்சம் கல்லாத்தாண்டா ஆக்கிக்கணும். ஒண்ணில்லே, இரண்டில்லே, பத்து வருஷமா நானும் பொறுமையாக இருக்கல்லியா?"

"அதுக்காக?"

"என் கண்ணை மூடறதுக்குள்ளே ஒரு பேரனையோ பேத்தியையோ எடுத்துக் கொஞ்சணும்ங்கற என்னோட ஆசை உனக்கு நியாயமானதாகப் படல்லியா? பிரளயம் மாதிரி, உள்ளே அடிச்சிண்டு மோதற அந்த ஆசைக்கு அணைபோட முடியல்லே. மேலும் இவ்வளவு காலமா இல்லாமெ, இனிமேலா இவளுக்குப் பிறக்கப் போறது?"

"அதைப்பற்றி முடிவுகட்ட நாம யாரு அம்மா? பட்டணத்திலே உங்க அப்பா அம்மாகிட்டே போய், பெரிய டாக்டராப் பார்த்து உடம்பைக் காட்டிண்டு வான்னு நீதானேம்மா அவளை ஊருக்கு அனுப்பி வைச்சே? இப்போ அந்த முடிவு தெரிஞ்சு, அவ திரும்பி வர்றதுக்குள்ளே இப்படி ஒரு கல்யாணக் காரியத்துக்கு என்னம்மா அவசரம்?"

"முடிவாவது, முதலாவது! நீ சரியான மக்குடா ராஜா. அந்த மலட்டைப் பத்தி இனிமேத்தானா முடிவு தெரிஞ்சுக்கணும்? சும்மா, இந்தக் காரணத்துக்காகத் தான், இங்கே இருக்க வேண்டாம்னு அவளை அப்படிச் சொல்லி ஊருக்கு அனுப்பி வைச்சேன்."

"அம்மா!"

காசிராஜன் வாய்விட்டே அலறிவிட்டான். எவ்வளவு பெரிய சூழ்ச்சி! தன் மனைவியின் சம்மதத்தைப் பெறாமல் மறுமணம் செய்துகொள்ள முடியாது என்பதைப் புரிந்து கொள்ளாத தாயின் அறியாமையை எண்ணி வருந்து வதைவிட, பெண்ணுக்குப் பெண்ணே முன்னின்று இழைக் கக்கூடிய கொடுமையை எண்ணிப் பார்த்தபோது இதயமே நடுங்குவது போலிருந்தது. தன் தாயின் அவா எவ்வளவு நியாயமாக இருந்தாலும், பாவம்! சாந்தாவை விட்டு வேறொரு பெண்ணுடன் வாழ்வதா?

பதிலே பேசாமல், கையில் பையுடன் வெளியே புறப் பட்ட மகனைத் தாய் தடுத்து நிறுத்தினாள்.

"எனக்குப் பதில் சொல்லிட்டுப் போடா. நான் அவாளுக்கு வாக்குக் கொடுத்திருக்கேன்."

"என்னாலே இப்போ ஒரு பதிலும் சொல்ல முடியா தம்மா. எல்லாம் சாந்தா வந்தபிறகு பார்த்துக்கலாம்."

பிள்ளையின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அம்மாவுக்குத் துக்கம் தாளவில்லை.

''லங்கிணி! சரியான சொக்குப்பொடி போட்டுத்தான் உன்னை மயக்கி வெச்சிருக்கா இல்லேன்னா, உன் நல்லதுக்குச் சொல்லற பெத்த தாயாரையே இப்படி எடுத்தெறிஞ்சு பேசுவியா? ஐயோ! எப்படி இருந்த பிள்ளை, எப்படி மாறிப் போயிட்டான்! பாவி, அவ நல்லா இருப்பாளா?'' தாயின் ஓலம் அவலமாக ஒலித்தது.

''அம்மா, உன்னை இப்ப நான் என்ன சொல்லிப்பிட்டேன்? எதுக்காக இப்பிடி அவளைச் சபிக்கிறே?''

''இன்னும் நீ என்னடா சொல்லணும்? சொல்ல வேண்டியதை எல்லாந்தான் உன் மனசைத் திறந்து கொட்டிப்பிட்டியே! ஆனா, நான் சொல்லறது இப்போ ஒண்ணும் நல்லதா உனக்கு விளங்காதுடா. உடம்பிலே இளரத்தம் ஓடற வரைக்கும் புரியவும் புரியாது. நாளைக்குத் தலையைக் காலெ வலிக்கறபோது, தள்ளாத காலத்திலே தலைமாட்டிலே நம்ம பிள்ளைன்னு ஒருத்தன் இல்லையேன்னு தோணும் நம்ம குடும்பம் இப்படி நூல் அறுந்த காத்தாடியாப் போயிடுச்சேன்னு அப்போ புரியும்டா ராஜா, அப்பப் புரியும்.''

சோடா புட்டியைத் திறந்ததும், குபீரென்று வழியும் நுரையைப்போல அந்தத் தாயின் அடக்கமுடியாத துயரம்; இந்த முயற்சியுடன் எழும்பி வடிந்துவிட்டது. வழக்கத்திற்கு மாறான இச்செயலால் அவள் களைப்படைந்துவிட்டாள்.

காசிராஜனால் அதற்கு மேல் அந்த இடத்தில் நிற்க முடியவில்லை. விடுவிடென்று இறங்கி வெளியே நடந்தான்.

வழியெல்லாம் ஒரே சிந்தனை. அலுவலகத்தில் அவனுக்கு அன்று வேலையே ஓடவில்லை. அம்மா கூறிய

வம்சாபிவிருத்தி உபதேசம், குடும்பப் பெருக்கின் அவசியம், அவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டே இருந்தது. ஆனால் பாவம்! அம்மாவையும் ஒரேயடியாகக் குறைகூற அவன் மனம் ஒப்பவில்லை

சாந்தாவை எவ்வளவோ ஆசையோடு அவளே முயன்றுதானே அவனுக்கு மணம் முடித்து வைத்தாள்? ஆரம்பத்தில் இரண்டு மூன்று வருஷங்கள் கவலையே இல்லாமல் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் ஓடி விட்டாலும், அதன்பிறகு சட்டென்று அம்மா விழித்துக் கொள்ளத் தவறவில்லை.

மருமகளின் வளைகாப்பையும் பூச்சூட்டலையும் அம்மா எவ்வளவுக்கு எவ்வளவு ஆவலாகவும் அவசரமாக வும் எதிர்பார்த்தாளோ; அத்தனைக்கு அத்தனை அது கானல்நீரைப் போலக் கண்ணாமூச்சி காட்டி அவளை ஏமாற்றிக் கொண்டே சென்றது.

இதற்காக, அம்மாவின் சொற்படி, சாந்தா தன்னோடு சேர்ந்து சுற்றாத கோயில் உண்டா? முழுகாத புண்ணிய தீர்த்தங்கள், வேண்டாத தெய்வங்கள் உண்டா? அத்தனையும் ஏமாற்றத்தில் முடிந்த பிறகுதானே அம்மாவின் அடக்க முடியாத ஆசை இப்படி ஆத்திரமாக உருப் பெற்று விட்டது? ஒருவேளை இந்த முடிவு அம்மாவுக்கு நியாயமானதாகத் தோன்றலாம்; ஆனால் அவளைப் பொறுத்தவரையில்—?

ஐந்தரை மணிக்கு மேலிருக்கும், எண்ணெய் இல்லாத விளக்கு மாதிரி, பகற்பொழுது விடுவிடுவென்று தேய்ந்து கொண்டே வந்து எங்கும் இருள் பரவத் தொடங்கி விட்டது. சுற்றும் முற்றும் சூழ்ந்திருந்த கூட்டமோ அரவமோ சிறிதும் இல்லை. கொய்யாப் பழம்போல், கரையில் முனிசிபல் விளக்குகள் கம்பத்தில் மினுக்கிக்

கொண்டிருந்தன. வழியெல்லாம், வளர்ந்து கொண்டே போவது போலிருந்தது.

வீட்டுக்குள் அடி எடுத்து வைத்த காசிராஜனை உள்ளே ஒலித்துக் கொண்டிருந்த விசும்பலும், அம்மாவின் அதட்டல் குரலும் அங்கேயே தடுத்து நிறுத்தி விட்டன.

'இவள் எப்போது வந்தாள்?' காசிராஜனுக்குத் 'திக்' கென்றது.

சாந்தாவின் விசும்பலை லட்சியம் பண்ணாமல் அம்மா கடுமையான குரலில் கேட்டுக் கொண்டிருந்தாள்: "அப்படி இருக்கிறபோது, இங்கே ஏண்டி புறப்பட்டு வந்தே? வைத்தியம் பார்த்துண்டு உங்கம்மா வீட்டிலேயே இருந்து தொலைக்க வேண்டியதுதானே?"

சாந்தா இதற்கும் பதில் ஏதும் கூறவில்லை. அவளுடைய பதிலை அம்மா எதிர்பார்க்கமில்லை போலும்! "டாக்டர் உடம்பைப் பார்த்துட்டுக் கடைசியா என்ன தாண்டி சொன்னார்? குழந்தை பிறக்குமா, இல்லே எப்போதுமே பிறக்காதா?"

இந்தக் கேள்விக்கும் சாந்தாவிடமிருந்து அழுகையே பதிலாக இருக்கவே, முடிவு தெரிந்து போன அம்மாவின் ஆத்திரம் எல்லை மீறியது.

"கேட்டால் பதில் சொல்லித் தொலையேன்! அழுகை என்ன வேண்டிக் கிடக்கு அழுகை? போயும் போயும் உன்னைத்தேடி, ராஜா மாதிரி என் பிள்ளைக்குக் கட்டி வெச்சேன் பாரு; என் தலையெழுத்தைச் சொல்லணும்" என்று தலையில் 'மடார் மடார்' என்று அடித்துக் கொள்ளவும். காசிராஜன் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது,

அவன் வந்தவுடன், வீடு சகஜ நிலையில் இருப்பது போல், பொய்யான தோற்றத்தில் காட்சியளித்துக்

கொண்டிருந்தது. காசிராஜன் எதையும் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அன்றிரவு, பிள்ளைக்குச் சாதம் போட அம்மா சாந்தாவை அநுமதிக்கவில்லை. சாப்பாடு போடும் போது சாந்தா கூறியது முழுவதையும் அம்மா கூறி, ''அவளுக்குக் குழந்தையே பிறக்காதாம்டா. டாக்டரே சொல்லிவிட்டார். இனிமேலாவது நாம் அந்தக் கல்யாணி யைப்பற்றி யோசிக்கலாமாடா ராஜா?'' என்று பரிவோடு கேட்டாள்.

''அது நிச்சயம் நடவாதம்மா.'' காசிராஜன் ஒரே வார்த்தையில் கூறிவிட்டுப் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து கைகழுவச் சென்றுவிட்டான். அம்மா அவனை ஆச்சரியத்திடனும் அதிர்ச்சியுடனும் பார்த்துக்கொண் டிருந்தாள். அதை லட்சியம் செய்யாதவன் போல் அவன் தன் அறைக்குச் சென்று விட்டான்.

சாந்தாவின் வைத்தியப் பரிசோதனை சாதகமாக இல்லை என்பதை, அவன் வீட்டுக்குள் நுழைந்தபோது கேட்க நேர்ந்த சம்பாஷணையிலிருந்தே புரிந்துகொண் டான். மனைவியைப் பற்றி இரக்கமும், அதே சமயத்தில் ஒருவித ஆத்மத் திருப்தியும் மன அமைதியும் அப்போது அவன் உள்ளத்தில் நிலவியிருந்தன.

அம்மா சாந்தாவைச் சாப்பிடக் கூப்பிட்டாள். சாந்தா தனக்குப் பசியில்லை என்று கூறிவிட்டாள். அதன் பிறகு அம்மா அவளை வருந்தி அழைக்கவோ வற்புறுத்தவோ இல்லை. அடுக்களைக் காரியங்களை முடித்துக்கொண்டு மாடிக்குப் படுக்கச் சென்று விட்டாள்.

காசிராஜன் மனம் அமைதியிழந்து தவித்துக்கொண் டிருந்தது. சாந்தாவைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று சமாதானப்படுத்தினான்.

''உன்னை ரொம்பப் புத்திசாலி என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இதற்காகவா நீ இப்படி வருந்துவது? எப்படி இருந்தாலும் எனக்கு நீதான், உனக்கு நான்தான். உன்னிடம் எனக்குள்ள அன்பை யாராலும் எந்தக் காரணங்களினாலும் குறைத்துவிடவோ மாற்றிவிடவோ முடியாது. என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா சாந்தா?'' அவன் மிகவும் உருக்கமாகக் கூறினான்.

ஆனால் அவள் மனம் அவன் கூறிய சமாதானங்களையும் மீறித் துயருறுவதைக் காணக் காசிராஜனுக்குத் தாளவில்லை. பெற்ற தாயிடம் கூடக் கூறத் துணிவில்லாத அதை—கொண்ட மனைவியிடமே கூறவேண்டிய நிலை எவ்வளவு துர்பாக்கியமானது?—

''சாந்தா, நான் இப்போது கூறப்போகும் செய்தியைக் கேட்டால், உனக்கு மட்டும் ஏதோ கொடுமை நிகழ்ந்துவிட்டதாக எண்ணி இப்படி நீ வருந்தமாட்டாய். நீ ஊருக்குப் போனதும் நானும் இங்கே என் உடம்பைக் காட்டினேன். என்னைப் பரிசோதித்த டாக்டர் உன்னைப் போலவே எனக்கும் குழந்தை பெறும் சக்தி இல்லை என்று கூறி எழுதிக் கொடுத்துவிட்டார். அப்போது அதைக் கேட்டதும் நான் துடித்த துடிப்பு!

''ஆனால் அந்தத் துடிப்பையும் மீறி, என் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் வக்கிரமான மகிழ்ச்சி ஊற்றெடுத்தது, ஒருவேளை ஊரிலிருந்து வருகிற நீயும் என்னைப் போலவே விபரீத முடிவுடன் வந்துவிட்டால், அப்போது அதற்காக உன்னை அம்மா கொடுமைப்படுத்தாமல் தடுக்கவாவது தெய்வம் எனக்கு உதவியதே. நாம் இருவரும் ஒரு கிளைப் பறவைகள் என்ற உண்மையைக் கூறிவிட்டால். பிறகு என்னை விட்டு உன்னை மட்டும் அம்மாவால் கோபிக்கவோ வெறுக்கவோ முடியாது அல்லவா?' என்ற மகிழ்ச்சிதான் அது. வா, சாந்தா, மேஜையில் வைத்திருக்கும் என் ரிசல்ட்டைக் காட்டு

கிறேன்'' என்று காசிராஜன் அவளது கரத்தைப் பற்றி இழுத்தபோது—

''மேஜையில் இருக்கும் உங்களது மெடிகல் ரிபோர்ட்டை நான் ஊரிலிருந்து வந்ததும் எதேச்சையாக பார்த்துவிட்டேன். தக்க சமயத்தில் அதை எனக்குக் காட்டிய கடவுளுக்கு நான் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும். அதைப் பார்த்து உங்கள் விஷயத்தைத் தெரிந்து கொண்டதனால்தானே, நான் என்னைப் பற்றின உண்மையைஅம்மாவிடம் சொல்லாமல் மறைத்து விட்டேன்?'' என்று சாந்தா கூறிக்கொண்டு வந்த போதே, ''என்ன; உன்னைப் பற்றின உண்மையா?' என்று காசிராஜன் திடுக்கிட்டுப்போய் அலறினான்.

அவனுடைய அந்த அதிர்ச்சி தணியுமுன் சாந்தா பெட்டியிலிருந்த தன் மெடிகல் ரிபோர்ட்டைக் கொண்டு வந்து கணவனிடம் நீட்டினாள்.

'சாந்தாவின் உடலில் எவ்விதக் கோளாறும் இல்லை' என்று பிரபல லேடி டாக்டர் ஒருவர் எழுதிக் கையெழுத்திட்டு, அந்த டாக்டர் பணிபுரியும் அரசாங்க ஆஸ்பத்திரியின் முத்திரையும் அதில் குத்தியிருந்தது.

காசிராஜனுக்குக் கண்ணையே மறைப்பது போலிருந்தது வாய் பேசும் சக்தியை இழந்துவிட்டது. பலதரப்பட்ட எண்ணங்களினாலும், உணர்ச்சிகளின் தாக்குதல்களினாலும் குழம்பிப் போயிருந்த கணவன் முன் சாந்தா தன் வலக்கரத்தை நீட்டியபடி மிகவும் நிதானமாகக் கூறினாள்.

''என்னுடைய இந்த ரிஸல்டைப் பற்றி எனக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. அது அவைக்கு உதவாத மகிழ்ச்சி. அதனால் எவ்விதப் பயனும் இல்லை. ஆனால் உங்களைப் பற்றின இந்த உண்மையை நீங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அம்மாவிடம் சொல்லமாட்டேன் என்று

நீங்கள் எனக்குச் சத்தியம் செய்துதர வேண்டும். என்மீது உங்களுக்கு இருக்கும் அன்பு காரணமாக உங்களிடம் இந்த உதவியை யாசிக்கிறேன்.''

''என்ன சத்தியமா?'' காசிராஜனது நாக்குக் குழறியது.

''ஆமாம், நம்முடைய இந்த விஷயம் எந்தக் காலத்திலும் அம்மாவின் செவிக்கு எட்டவே கூடாது.''

''நிச்சயம் முடியாது. அப்படி ஒரு பொய்யான சத்தியத்துக்கு நான் உடன்படவே மாட்டேன். என் பொருட்டு நீ வாங்குகிற ஏச்சையும் பேச்சையும் பார்த்துக் கொண்டிருக்க என்னால் ஆகாது. என் குறையையும் உன் குறையின்மையையும் அம்மாவுக்குத் தெரியப்படுத்தினால் தான் என் மனதுக்கு ஆறுதல் கிட்டும். அப்போதுதான் சாந்தா, என் அம்மா உன்னை இந்த வீட்டில் அமைதி யோடு இருக்க விடுவாள்'' என்று காசிராஜன் பேசிக் கொண்டிருந்த போதே சாந்தா அவன் பாதங்களைப் பற்றிக்கொண்டு கதறியே விட்டாள்,

''தயவு செய்து எனக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு அந்தக் காரியத்தை மட்டும் செய்துவிடாதீர்கள். அம்மாவிடம் பேச்சு வாங்குவது என்பது ஆதியிலிருந்தே எனக்குப் பழக்கமான ஒன்று. என்னை 'மலடு' என்று அம்மாவோ அல்லது ஊரே பழித்தாலும் எனக்கு இனி வருத்தம் ஏற்படாது. முன்னைவிடத் தெம்பாக, ஆத்மத் திருப்தியோடு அந்தப் பழிச்சொல்லை என்னால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் அதே சமயம், உங்களைப் பற்றி அப்படி யாராவது பேசினால், இல்லை—அந்த எண்ணத்தோடு பார்த்தால்கூட அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.

''அது மட்டும் அல்ல, உங்களைப்பற்றின இந்த உண்மை தெரிந்தால், அந்த அதிர்ச்சியே போதும், அது

அம்மாவுக்கு எமனாகவே முடியும். ஆனால்—என்றைக்காவது ஒருநாள் தன் பிள்ளையின் மனம் மாறும். இன்று இந்த கல்யாணி இல்லாவிட்டாலும், சில காலம் கழித்தேனும், வேறு ஒரு பெண்ணை மணந்துகொள்ள சம்மதிப்பான்; தனக்கு அவன் மூலம் ஒரு பேரனோ பேத்தியோ பிறக்கும் என்ற நம்பிக்கையைக்கூட நீங்கள் வேரோடு அழித்து விடாதீர்கள். தயவு செய்து உங்களிடம் நான் வேண்டிக் கொள்வதெல்லாம் அது ஒன்றுதான்'' என்று அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதில் அவள் குரல் கரகரத்தது.

காசிராஜன் அதிர்ந்தே போனான். சாந்தாவின் பேச்சில், இந்த மண்ணின் மாண்பைக் கண்டான். அவனது இதயத்தினின்றும் பிரவாகமாகப் பெருக்கத் தோடும் உணர்ச்சிகளுக்கு அவனால் உருவம் கொடுத்து விமரிசிக்க முடியவில்லை. ''சாந்தா, நீ எனக்கு மனைவி சாந்தா மட்டுமல்ல'' என்ற வார்த்தைகளை முடிக்கு முன்பு அவன் விழிகள் கலங்கிவிட்டது. ஆனால் அந்த வார்த்தைகளை மேலே பேச விடாமல், அவள் அவனது வாயைப் பொத்தினாள்.

''நானும் உங்களை என் கணவராக மட்டும் காண வில்லை'' என்று கூறியபடி ஒரு தாய்க்கு உரிய பாசத்துடன் அவள் அவன் தலையை வருடிக்கொண்டிருந்த போது, ஒரு பச்சிளங் குழந்தையைப் போல காசிராஜன் அவள் மார்பில் முகத்தைப் பதித்துக்கொண்டிருந்தான்.

விழிகளை மஸ்லின் துணியால் மறைப்பதுபோல், கண்ணீர் பார்வைக்குத் திரைபோட்டுத் தடுத்துக்கொண் டிருந்தது. விடிவிளக்கின் அந்த மங்கிய நீல ஒளியில் முழுமதியைப் போலப் பிரகாசித்துக்கொண்டிருந்த சாந்தாவின் முகம், அதில்படிந்திருக்கும் அன்பு, பாசம்—மகத்தான தியாகத்தின் ஒளி—அவன் கண்களைக் கூசச் செய்தன.

—கலைமகள்

# அம்மா காத்திருக்கிறாள்

பங்குனி மாதத்துப் படை படைக்கிற வெய்யலில் கஞ்சனூர் கப்பி ரஸ்தாவில், கானல் நீர் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது.

பாலதண்டாயுதபாணி ஸ்டோர் அதிபர் சம்மந்தம் பிள்ளை தன்னுடைய கடைப்பூட்டை மூன்றாவது முறையாக இழுத்துப் பார்த்தார். பிறகு திருப்தியடைந்த முகத்துடன் அருகில் பவ்யமாக நின்று கொண்டிருந்த கடைச் சிப்பந்திகளைப் பார்த்துத் தலையை அசைத்தார். அவர்கள் விடைபெற்றுச் சென்றனர். கடைச் சாவியை இடையில் சொருகிக் கொண்டு, குடையை விரித்துப் பிடித்த வண்ணம் அவரும் மத்தியானச் சாப்பாட்டிற்கு நடையைக் கட்டினார்.

வெறிச்சேடிக் கிடந்த சாலையும், அதில் மாய மானைப் போல் தோன்றித் தோன்றி, மறைந்தும் மிதந்தும் சென்று கொண்டிருந்த கானல் காட்சியும், பிள்ளைக்குத் தன்னுடைய வாழ்க்கையைக் குத்திக் காட்டுவது போலிருந்தது. அந்த நினைப்பு வந்த போது இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் ஒரு உணர்ச்சி மூண்டது. உதடுகள் அவரையும் அறியாமல் 'கருணாகரா' என்று உதட்டுனுள்ளேயே ஒலி எழும்பின. தாங்க

முடியாத புத்திரபாசம் கணப் பொழுதிற்குள் பேரலை போல் நெஞ்சத்தினுள் கிளர்ந்தெழுந்து அவரை புரட்டி எடுத்தது. நடையின் வேகம் குன்றி அவர் தடுமாறினார்.

லட்சக்கணக்கான சொத்து; ஏழுதலைமுறைகளுக்கு உட்கார்ந்து சாப்பிடலாம். ஆனால் அப்படி உட்கார்ந்து சாப்பிட வேண்டியவன்; தவமிருந்து பெற்றபிள்ளை. தள்ளாத காலத்தில் தங்களை புறக்கணித்து விட்டு ஓடிப் போய்விட்டானே!

சம்பந்தம்பிள்ளை கஞ்சப் பேர் வழித்தான். ஆனால் அதற்காகப் பணத்தின் பின்னால் ஓடுபவர் என்று அர்த்த மல்ல. வீண் ஆடம்பரமும், படாடோபமும் அவரிடம் கிடையாது. அவரைப் பார்த்தால் மளிகைக் கடைக் குமாஸ்தா என்றுதான் அறியாதவர்கள் எண்ணுவார்களே தவிர லட்சாதிபதியான பாலதண்டாயுதபாணி புரவிஷன்ஸ் அதிபர் என்று சொன்னால் கூட நம்ப மாட்டார்கள். அத்தனை அடக்கம்.

கஷ்டப்பட்டு தானே சேர்த்த சொத்து. அதனால் பணத்தின் அருமை தெரியாதவர். எதிலும் கண்டிப்பும் நேர்மையும் எதிர்பார்ப்பவர். ஆனால் அதுவே அவரு டைய துன்பத்திற்குக் காரணமாக அமைந்து விட்டது.

தன்னுடைய கடையில் வேலை செய்யும் ஒவ்வொரு சிப்பந்தியும் ஹரிச்சந்திரனாக இருந்தே ஆக வேண்டும் என்று எதிர்பார்ப்பவர் அவர். இப்படி இல்லாதவனுக்கு அங்கே வேலை இல்லை. ஒவ்வொரு சிப்பந்திக்கும் கடின மான பரீட்சை வைத்துத்தான் இறுதியில் தன் ஸ்டோரில் 'பெர்மனெண்ட்' ஆக்குவார்.

இப்படித் தனக்குச் சம்பந்தம் இல்லாதவர்களிடம் நேர்மையும் சத்தியமும் வேண்டுமென்று எதிர்பார்ப்பவர், தன் சொந்த மகனிடம் இவற்றை எல்லாம் எதிர்பார்த்தால் அதில் தவறு என்ன?

ஆனால் கருணாகரன்தோற்றுவிட்டான். ஆம்! அவரது பரீட்சையில் அவரிடம் அவன் தோற்றுப்போனான்.

அப்பா மற்றவர்களிடம்செய்வதுபோல், 'பணத்தைப் பருப்பு மூட்டைக்குப் பின்னால் போட்டுவிட்டு', 'எடுக்கிறானா பார்க்கலாம்', என்று வழக்கமாக வேவு பார்க்கிறவரைக்குமெல்லாம், கருணாகரன் காத்திருக்கவில்லை. அப்பாவின் பைக்குள்ளே அவர் இல்லாதபோது கையை விட்டுவிட்டான். இதனால் பிள்ளை பண விஷயத்தில் இன்னும் அதிகக் கண்ணும் கருத்துமாய் இருக்கத் தலைப்பட்டார். மறந்தும் மணிபர்ஸை சட்டைப் பையோடு ஆணியில் மாட்டுவதில்லை. பையனைக் கடைக்குவர அனுமதித்தாலும், கல்லாப் பெட்டிப் பக்கமே அண்ட விடுவதில்லை. கருணாகரன் எடுக்கிறானோ இல்லையோ, "எடுத்துவிடுவான்; எடுத்துவிட்டால் என்ன செய்வது?" என்கிற பயம் அவர் மனத்தில் ஊறிவிட்டது. வரவர கணவருடைய இந்தப் போக்கைக் கண்டு காமாட்சி மிகவும் மனம் வருந்தினாள். யாருக்காக இத்தனை சொத்தும்?

ஒருநாள் கருணாகரன் நாலணாவைக் கேட்காமல் எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் சென்றுவிட்டான்.

'சின்னப் பையன்தானே; ஏதோ அறியாத்தனம். மேலும் இவ்வளவு சொத்துக்களையும் ஆண்டு அனுபவிக்கப் போகிறவன் அவன்தானே' என்று லேசாகக் கண்டித்து விட்டிருக்கலாம். ஆனால் வெறும் வாயை மெல்லுகிற பிள்ளையா விட்டு விடுபவர்?

தூணில் கட்டிவைத்து முழங்காலுக்குக்கீழ் பிரம்பால் விளாசித் தள்ளிவிட்டார். திருட்டுப் பிழைப்பு ஒரு பிழைப்பா!

காமாட்சி குறுக்கேவந்து நின்றுகொண்டு கத்தினாள்

''என் ஒரே பிள்ளை இவன். இனியும் இவன்மீது ஒரு அடி விழுந்தால் நான் கிணற்றில் போய் விழுந்து விடுவேன்'' என்று ஆவேசம் வந்தவளைப்போல் கூறினாள்.

பிள்ளை கோபத்தோடு பிரம்பினை இரண்டாக முறித்து மனைவியின்முன் வீசி எறிந்தார். ''இன்றோடு இவன் யாரோ நான் யாரோ. இவனுக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் அற்றுவிட்டது'' என்று கூறியபடி துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியே சென்றுவிட்டார்.

எவ்வளவு பெரிய வார்த்தைகள்— அன்று கோபத்தோடு கூறிய வாக்குத்தான் எத்தனை தூரம்-காலத்தால் மெய்யாகிவிட்டது, அதைத்தான் அப்போது அவர் நினைத்துக் கொண்டிருந்தார்.

'லட்ச ரூபாய்க்குமேல் சம்பாதித்து வைத்திருக்கிறேன் என்ன பயன்? இத்தனை சொத்துக்கும் உரியவனை: ஆண்டு அனுபவிக்க வேண்டியவனை நாலணா காசுக்காக நாயைப்போல் அடித்து அவன் வீட்டை விட்டே ஓடிப் போகக் காரணமாகிவிட்டேனே?' என்றுதான் அவர் உள் மனம் சதா உறுத்திக்கொண்டே இருந்தது. அதன் காரணமாக காணாமற் போன கருணாகரனைப் பற்றிப் பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் கொடுத்துப் பார்த்தார். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் கடிதங்கள் எழுதிக் கேட்டார். கை சளைத்ததுதான் மிச்சம்.

ஒரு நண்பர் வந்து ''மதுரை சித்திரைத் திருவிழாவில் கருணாகரனைப் பார்த்தேன்'' என்று கூறினார். காமாட்சியும் அவரும் அன்று இரவு வண்டிக்கே மதுரை பயணமானார்கள். ஆனால் அழகர் ஆற்றில் இறங்குகிற திவ்ய சேவைதான் கிட்டியதே தவிர கருணாகரன் கண்ணில் படவே இல்லை. வருஷங்கள்தான் ஓடின.

பிறகு பட்டணத்தில் எக்ஸிபிஷனில் பார்த்ததாக நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் கூறினார். பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பலனாகத் தானிருந்து; பையனைக் காண முடியவில்லையே!

ஆனால்—அன்று வீட்டை அடைந்ததும் அவருக்கு அப்படியொரு நற்செய்தி காத்திருக்குமென்று பிள்ளை எதிர்பார்க்கவே இல்லை.

பாதி சாப்பிடும்போது காமாட்சியம்மாள், பம்பாயி லுள்ள தன் தம்பி தாமோதரனிடமிருந்து வந்திருக்கும் கடிதத்தைப் பற்றிக் கூறினாள். அதில் கருணாகனைப் பார்த்ததாக எழுதியிருப்பதை கேட்டதும், சாப்பிடும் போதே அவர் கடிதத்தை வாங்கிப் பார்த்தார்.

கையலம்பியதும், ''புறப்படு காமாட்சி, பம்பாய் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடலாம். எனக்கு என்னவோ இந்தத் தடவை நிச்சயம் அவன் என் கண்ணில் படுவான் போலத் தோன்றுகிறது'', என்று நம்பிக்கையும், உற்சாகமாய்க் கூறினார். ஆனால் காமாட்சியம்மாள், அவருடன் செல்ல விரும்பவில்லை.

''என் துரதிர்ஷ்டமோ, என்னவோ, நான் கூட வந்தாலே அவன் அகப்பட மாட்டேன் என்கிறான் மதுரைக்கும், திருச்சிக்கும், மதராஸுக்கும் இப்படி ஊர் ஊராய் என்னையும் சேர்த்துக் கொண்டு அலைந்தது

போதும். இந்தத் தடவை நீங்கள் தனியே பம்பாய் போய் விட்டு; வரும்போது மகனோடு வந்து சேருங்கள்' என்று கூறிவிட்டாள்.

அதன்பிறகு இரவு வண்டிக்கே பிள்ளை தனியாகப் பம்பாய் புறப்படுவது முடிவாகிவிட்டது.

மனைவி இல்லாமல் மகனை தேடிப் புறப்படுவது அவருக்குப் புது அனுபவமாக இருந்தது. வழியெல்லாம் தனிமையில் மகனைப் மற்றியே எண்ணிக்கொண் டிருந்தார்.

இன்றைக்கெல்லாம் இருந்தால் கருணாகரனுக்கு இருபது வயது இருக்கும். இந்த எட்டு வருஷங்களில் அவன் யுவனாக எப்படி வளர்ந்து மாறியிருப்பானோ! நல்ல நாகரிகம் தெரிந்தவனாகத்தான் இருப்பான். எங்கெல்லாமோ சுற்றித் தானாக உழைத்து, இங்கே வந்து என்ன வேலையில் இருக்கிறானோ. அவ்வளவு பெரிய பட்டணத்தில் அவனை எப்படித்தான் தேடிக் கண்டு பிடிக்கப் போகிறேனோ'' என்றெல்லாம் விசாரப்பட்டுக் கொண்டே பிள்ளை பம்பாய் வந்து சேர்ந்தார்.

ஸ்டேஷனுக்கு அவரை வரவேற்க தாமோதரன் வந்திருந்தார். புதிதாக வந்திருக்கும் பிள்ளையிடம், பலநாள் பழகியதுபோல் தாமோதரத்தின் குழந்தைகள் ''மாமா...மாமா...'' என்று ஒட்டி உறவு கொண்டாடின.

முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேச்சு திரும்பியது. தாமோதரன் கூறினார்:

''ஒரு வாரத்திற்கு முன்பு நானும் என் மனைவியும் 'அரோராவில்' ஒரு படம் பார்க்கப் போயிருந்தோம். உயர் வகுப்பு டிக்கட் வாங்குகிற கியூவை எதேச்சையாகக்

கவனித்தேன். சாட்சாத் கருணாகரனேதான். பிரமாதமாக டிரஸ் செய்துகொண்டு ஆள் பார்ப்பதற்கு ராஜா மாதிரி நின்று கொண்டிருந்தான். கறுப்புக் கண்ணாடி வேறே! என்ன இருந்தாலும் பழக்கமான முகம் மறந்தா போகும்?

ஏதோ ஒரு பெரிய கம்பெனியில் நல்லவேலையில்தான் இருக்க வேண்டும் என்று மட்டும் புரிந்தது. 'சரி' அவனை இப்போதே விசாரித்துவிடலாமா, அல்லது தியேட்டருக்குள் போய் சாவதானமாகப் பேசிக் கொள்ளலாமா', என்று நான் யோசித்துக்கொண்டிருக்கும்போதே திடீரென்று அவனைக் காணவில்லை.

''இப்படிக் காத்திருந்து, காத்திருந்து எதிர்பாராத விதமாக ஒருநாள் கண்டும் பேசமுடியாமல் போய் விட்டது. ஆனாலும் ஒன்று— கருணாகரன் நிச்சயமாக பம்பாயில், அதுவும் இந்த வட்டாரத்தில்தான் எங்காவது வசிக்கவேண்டும். கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன்தான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன்'' என தாமோதரன் கூறி முடித்தார்.

அதைக் கேட்டதும் அப்போதே கருணாகரனைக் கண்டுவிட்டது போலவும், அவனோடு கஞ்சனூருக்குச் சென்று இறங்கும் தன்னைக் காமாட்சி ஆரத்தி சுற்றி வரவேற்பது போலவும் அவர் உள்ளத்தில் கனவுகள் பெருக்கெடுத்து ஓடின. அந்தக் கனவின் இறுதியை, மிகவும் அருமையாக பிள்ளை முடித்திருந்தார்.

ஊருக்குப் போனதுமே, ஒரு கால்கட்டையும் கட்டி, தன் கடைச் சாவியையும் அவன் கையில் ஒப்புவித்து விடுகிறார். அவர்கள் அடுக்கடுக்காகப் பெற்றுப்போடும் பேரன் பேத்திகளைக் கொஞ்சிக்கொண்டே காமாட்சியும் தானும் இறுதி நாட்களைக் கழித்துவிடுவது— இதுதான் அந்தக் கனவின் முடிவு.

ஆனால் இதெல்லாம் நனவாக வேண்டுமானால்...

மழையையும், வெய்யிலையும், பசியையும், தாகத்தையும் பாராமல், பம்பாய் வீதிகளில் பிள்ளை, மகனைத் தேடி அலைந்து கொண்டிருந்தார். தாமோதரனும் அவருக்குப் பூரணமாக உதவி செய்தார். மாமாவோடு ஆரம்பத்தில் ஒரு வாரம் லீவு போட்டுவிட்டுத் தேடினார்; ஆபீஸ் நண்பர்களிடம் எல்லாம் அடையாளம் சொல்லி வைத்திருந்தார்.

இதற்குள் பம்பாய், அந்தச் சுற்றுவட்டாரம் எல்லாம் தனக்கு ஓரளவு பழக்கம் ஆகிவிட்டதுபோல் சம்பந்தம் பிள்ளைக்குத் தோன்றியது. ஆனால், அவர் தனியே வெளியே வெகு நேரம் வரைச் சென்று வருவதை தாமோதரன் விரும்பவில்லை.

''மாமா, கருணாகரனைத் தேடிப் பிடித்து உங்கள் கையில் ஒப்புவிக்க வேண்டியது என் பொறுப்பு. நீங்கள் ஊருக்குப் புதிசு. தனியே போகக்கூடாது. இந்த பம்பாய் பொல்லாத ஊர். பஸ்ஸும் லாரியும் எமனாகத் திரியும், மேலும் பணத்தோடு ஒருவன் தனியே அகப்பட்டால் அபேஸ்தான்'' என்று தாமோதரன் எச்சரிக்கை செய்து, பயமுறுத்திக் கூடப் பார்த்தார். ஆனால், அவர் கேட்டால்தானே!

''என்னை ஒரு பயல் அசைக்க முடியாது மாப்பிள்ளே. நான் கேடிக்குக் கேடி; நல்லவனுக்கு நல்லவன். என்னைப் பற்றிக் கவலைப்படாமெ ஆபீஸுக்குப் போங்க' என்று சமாதானம் கூறி அனுப்பிவிட்டார். ஆனால் உண்மையில் ஒருநாள், தாமோதரன் கவலைப்பட்டது போலவே ஆகிவிட்டது.

பொடி நடையாகவே, பம்பாயின் அழகை ரசித்த வண்ணம், மகனைத்தேடிப் புறப்பட்டுப் போய்ச்

கொண்டே இருந்துவிட்ட பிள்ளைக்குத் 'திக்'கென்றது. இரவு மணி ஏழு.

தன்னுடைய பொடி நடை பெரு நடையாகி வெகு தூரம் வந்துவிட்டதையும்; எதிரே ஒரு சினிமாக்கொட்டகை இருப்பதையும் கண்டார். "அரோரா" என்ற அதன் பெயரைப் படித்ததும் அன்று தாமோதரன் கூறியது அவரது நினைவிற்கு வந்தது.

—'ஒருவேளை அதிர்ஷ்டவசமாக இன்றும் கருணாகரன் இங்கே சினிமா பார்க்க ஏன் வந்திருக்கக் கூடாது? உள்ளே போய்ப்பார்த்துவிட்டால் என்ன?' என்கிற எண்ணம் தோன்றவுமே மறுகணம் பிள்ளை ஓர் உயர்ந்தவகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு தியேட்டருக்குள் நுழைந்து விட்டார். உயர்ந்த வகுப்பு என்றால்— உயரமான இடத்தில், இருக்கும். அங்கிருந்து பார்த்து மகனைத் தேடுவது சுலபமல்லவா-என்பது அவர் எண்ணம். ஆனால், அவர் துர்அதிர்ஷ்டம் அன்று அவன் வரவே இல்லை.

படம்விட்டு சிறிதுதூரம் பழக்கப்பட்டவர் போல் வந்து கொண்டிருந்த பிள்ளை, ஒரு சதுக்கத்தில் வழி தெரியாமல் தடுமாறினார். போவோர் வருவோரிடம் எல்லாம் தான் போக வேண்டிய இடத்தை விசாரித்துக் கொண்டே நடந்தார். சிலர், தாங்களும் அங்கேயே போவதாகக்கூட அழைத்தார்கள். ஆனால் பிள்ளையா ஏமார்ந்துவிடக் கூடியவர்?

ஊருக்குப் புதிது—வழி தெரியாத ஆசாமி என்று புரிந்துகொண்டு, உதவி செய்வதுபோல 'நாங்களும் அதே இடத்திற்குத் தான் போகிறோம்' என்று கூறி ஏமாற்றி அழைத்துச் செல்கிற எத்தனை கதைகளை அவர் கேட்டிருக்கிறார்! விவரத்தை மட்டும் தெரிந்து கொண்டு யாரையும் பின்பற்றாமல், அவரவர்கள் கூறிய

வழிப்படி நடந்து சென்று கொண்டிருந்த பிள்ளைக்குத் திடீரென்று தூக்கி வாரிப்போட்டது.

பம்பாயில் சுவர்க்கமும் நகரமும் இத்தனை அருகில் தான் இருக்குமா? சற்று முன்புவரை தேவலோகம் போல் ஒளி வீசிக் கொண்டிருந்த இடமெலாம், கடந்து எப்ப டியோ கும்மிருட்டான சந்தடியற்ற தாராவி பகுதிக்கு அவர் வந்து சேர்ந்து விட்டார். குடிக்கும், கொலைக்கும், கொள்ளைக்கும் இந்தப் பகுதிப் பெயர் பெற்ற இடமாயிற்றே!

அவர் உடல் நடுங்கியது. இரவு மணி பனிரெண்டுக்கு மேல் இருக்கும். குடிசைகள் கொண்ட அப்பகுதியில், அத்திக் கனியாக-எங்கோ மூலைக்கொரு கம்பத்தில்-மின்விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. சாக்கடை நாற்றமும், கொசுக்களின் ரீங்காரமும் குடலைப்புரட்டி எடுக்க அந்தப்பேட்டை பகுதி வழியே அவர் போய்க் கொண் டிருந்தார்.

சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல் பிள்ளை தன் அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். அப்பாடா! சிங்கப்பூர் பெல்டும், அதனுள் இருக்கும் கத்தை கத்தையான நோட்டுகளும் பத்திரமா யிருந்தன.

இருந்தாலும் அப்போதுதான் அவருக்கு— அந்த அகால வேளையில் தாராவிக்கு வந்துவிட்ட பிறகு— முதன்முதலாக பயம் தோன்றியது. பம்பாயைப்பற்றி தாமோதரன் வர்ணித்த பயங்கரமான வரிகள் மீண்டும் நினைவுக்குவந்து அவர் நெஞ்சைக்கலக்கின. அதேநேரம்—

கையில் கத்தி பளபளக்க ''கபர்தார்—ரூப்யா தோ; நஹிதோ...மர்கயா...ஜரூர்'' என்று பயங்கரமான குரலில் மிரட்டிய வண்ணம், காலனைப்போல் எதிரில் வந்து

நின்று விட்டவனை கண்டு பிள்ளை ஒரு கணம் நடுங்கியே போனார். ஆயினும் அவர் தன்னுடைய அச்சத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக் கொண்டு ஆளை நோட்டம் விட்டார்.

எங்கே எப்படி பதிலுக்குத் தாக்கி மடக்கலாம் என்பதிலேயே அவர் மனம் லயித்திருந்தது— இடையிலே கைலி அதைச் சுற்றி ஒரு தடித்த தோல்பில்டு, கையிலே கத்தி, கழுத்திலே தாயத்து அதன் மேல் ஒரு கைக்குட்டை, கன்னத்திலே ஒரு ஒரு கறுப்பு பெரிய மச்சம். நீண்ட மீசை, கண்களிலே முகமூடி வேறு—இத்யாதி அவலட்சணத்திற்கு கிரீடம் வைத்தாற்போல் தலையிலே முண்டாசு வேறு!

தொழிலுக்கேற்ற நல்ல உடம்புதான்—என்று அவர் எண்ணிக் கொண்டிருக்கும்போதே கேடி ஹிந்தியில் மிரட்டினான்: ''மரியாதையாய் பணத்தையெல்லாம் கழட்டாவிட்டால் உயிரோடு போகமாட்டாய்'' என்று.

பாஷை அவ்வளவாகப் புரியாவிட்டாலும்பிள்ளைக்கு அரையும் குறையுமாக விஷயம் ஓரளவு விளங்கிவிட்டது— பணம் போன பிறகு உயிர் எதற்கு? பணம்தானே ஜீவ நாடி. அதை இவனிடம் கொடுத்துவிட்டுப் போவதாவது!''—பிள்ளையும் சளைக்கவில்லை. கோபத்தோடு தான் கூறினார்.

''என்னிடம் சல்லிக்காசு கிடையாது. நீ எது வேண்டுமானாலும் செய்து கொள். ஆனால் என்னைக் கொன்றால் உனக்குத்தான் நஷ்டம்; கத்தியை அலம்ப சோப்பு வாங்கக்கூடக் காசு தேறாது!''—என்று துணிந்து அவனுக்குப் புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி—நேரம் போனால் சரி; அதற்குள் யாராவது உதவிக்கு வரமாட்டார்களா என்று—அவனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே சமயம் பார்த்து ''குபீர்'' என்று மூக்கில்

முஷ்டியால் பலக்க ஒரு குத்து விட்டுவிட்டு ''போலீஸ்... போலீஸ்'' என்று உரக்கக் கத்தியபடி ஓட்டம் பிடித்தார்.

பிள்ளையினுடைய இந்தியத் திடீர் தாக்குதலைச் சற்றும் எதிர் பாராத எதிரி - மூக்கின் வலி தாங்கமாட்டாமல் கத்தியபடி இரையை நழுவ விட்ட விலங்கைப் போல—ஆவேசத்தோடு அவரைத் துரத்திக்கொண்டு ஓடினான். அந்தப் பிராந்தியம் முழுவதும் எதிரொலிக்க அலறிய பிள்ளையின் அபாயக் குரலைக் கேட்டோ என்னமோ, எங்கோ தொலைவில் இரண்டு போலீஸ் ஊதல் கேட்டது.

பிள்ளையும் திருடனும் ஒரு திருப்பத்தில் கட்டிப் புரண்டு கொண்டிருக்கும் போது திடீரென்று ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிய வண்ணம் போலீஸ் லாரி ஒன்று அவர்கள் எதிரில் வந்து நின்றது. அதிலிருந்து குதித்த இரு ஜவான்களிடம் பிள்ளை 'லபக்' கென்று கேடியைப் பிடித்துக் கொடுத்து விட்டார்.

போலீசார் கேடியை வானில் தள்ளிவிட்டுத் திரும்புவதற்குள். பிள்ளை அங்கிருந்து நைஸாக நழுவி ஓட்டம் பிடிக்கப் பார்த்தார்.

—'ஆமாம். காரியம் முடிந்து விட்டது. இனி நமக்கேன் வம்பும் தும்பும்? மகனைத் தேடி வந்த இடத்தில், சாட்சி, சம்மன் கோர்ட்டு என்று வேறு அலைய வேண்டுமா? ஏதோ இந்தக் கண்டத்திலிருந்து தப்பினோமே, அதுவே போதும்'—என்பதுதான் பிள்ளையின் எண்ணம். ஆனால் போலீஸ் விட்டு விடுமா?

''எங்கே போறீங்க சார், நீங்களும் ஏறுங்க வண்டியிலே''—என்றார் ஒரு ஜவான்.

''நான் எதுக்கப்பா அங்கேயெல்லாம் வரணும். அதுதான் கேடியைப் பிடிச்சுக் கொடுத்திட்டேனே. எனக்கு

ஒன்றும் நஷ்டமில்லே. என்னை விட்டு விடுங்க, நான் ஊருக்குப் புதிசு'' என்று கெஞ்சினார் பிள்ளை.

''அதெல்லாம் முடியாது. ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் கொடுத்திட்டுப் போயிடுங்க'' என்று அவரையும் பிடிவாதமாக ஏற்றிக்கொண்டு, வான் 'கிங்ஸ்வே'யை நோக்கிப் பறந்தது.

அது ஒரு சிறிய போலீஸ் நிலையம். கேடியை லாக் அப்பில் அடைத்தார்கள். யாரையோ அழைத்து வரவோ எதற்காகவோ வான் மீண்டும் புறப்பட்டுச் சென்றது.

கேடியைப் பூட்டி வைத்திருக்கும் அறைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு பெஞ்சியில் பிள்ளை தன் தலை விதியை நினைத்து உட்கார்ந்து கொண்டிருந்தார். தாமோதரன் தன்னைக் காணாமல் என்ன கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறானோ என அவர் மனம் தவித்தது. அவரைத் தவிர அந்த அறையில் யாருமில்லை. இருந்த மேஜையும், பெஞ்சும் நாற்காலிகளும் காலியாக இருந்தன.

வான் புறப்படுவதற்கு முன்பு எதற்கோ அவர்கள் ''தன்னை சரியான அதிர்ஷ்டசாலி' என்று கூறிக் கைக் குலுக்கிவிட்டுச் சென்றதையும், வாசலில் பீடி பற்றவைத்த வண்ணம், இரு ஜவான்கள், 'கிழவனுக்கு அடிச்ச யோகத்தைப் பார்த்தியா?' என்று பேசிக் கொள்வதையும் கேட்டு ஒன்றும் புரியாமல் ஒரேயடியாகக் குழம்பிக் கிடந்தார் பிள்ளை. அப்போது தான் ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது.

''இங்கே கொஞ்சம் வாருங்களேன்'' என்று தணிந்த குரலில் யாரோ அழைப்பது கேட்டு பிள்ளை அதிர்ந்து போய்த் திரும்பிப் பார்த்தார்.

—லாக் அப்பில் அடைக்கப்பட்டிருந்த கேடிதான் அவரை அப்படிக் கூப்பிட்டு, அருகில் வரும்படிச் சைகை

காட்டினான் பிள்ளைக்கு உடம்பெல்லாம் ஒருகணம் உதறல் எடுத்தது. எதற்காகக் கூப்பிடுகிறான்?

''அப்பா, பயப்படாமல் வாருங்களேன்; ஒரு விஷயம்.''

''அப்பாவா? பயப்படாமல் வருவதா? இது என்ன கூத்து. இவனுக்கு நான் எந்த ஜாமத்தில் அப்பாவாக இருந்தேன். மெல்ல உறவு கொண்டாடி அழைத்து. அருகில் வந்ததும் 'லபக்'கென்று கழுத்தைப் பிடித்து நெரித்து பழி தீர்த்துக் கொள்ளத்தான் அழைக்கிறானோ''

—இப்படி அவர் எண்ணிக் கொண்டிருப்பதற்குள் அந்தக் கேடி மீண்டும் கூப்பிட்டான்.

''அப்பா! இன்னும் என்னை உங்களுக்குப் புரியவில்லையா? நான் தான் அப்பா கருணாகரன். அம்மா கஞ்சனூரில் தான் இருக்கிறாளா, அல்லது கூடவே அழைத்து வந்திருக்கிறீர்களா? வானில் ஏறும்போதே உங்களை நான் அடையாளம் கண்டு கொண்டு விட்டேன் அப்பா''

பிள்ளைக்கு ஓர் உலுக்கு உலுக்கியது. கூர்ந்து கவனித்தார். பொய் மீசையையும், போலி மச்சத்தையும் இப்போது கேடியிடம் காணவில்லை. அவன் தன் மகன் கருணாகரன் தான் என்பதற்கு அதற்கு மேல் அவருக்கு எவ்வித விளக்கமும் வேண்டியிருக்கவில்லை. பரபரப்புடன் வாசலை எட்டிப் பார்த்தார். அந்த இரு ஜவான்களும் அரட்டையோடு சுருட்டு இழுக்கும் சவாரஸ்யத்தில் இருந்தனர்.

பிள்ளையவர்கள் அந்த முரட்டுக் கம்பிக் கதவில் தலையை மோதிக்கொண்டு; கருணாகரா, கடைசியில் இங்கேயும் உனக்கு நான்தானாடா எமனாக வர வேண்டும்? அங்கே உன் அம்மா உன்னை ''எப்பப்

பார்க்கப் போகிறேன்; எப்பப் பார்க்கப் போகிறேன்' என்று காத்திருக்கிறாளே. அவளுக்கு என்ன பதில் சொல்லுவேன்? அவள் முகத்தில் போய் எப்படியடா விழிப்பேன்'' என்று அழும்போதே கருணாகரன் அவர் வாயைப் பொத்தி, சூழ்நிலையை உணர்த்தி மெதுவாக, ஆனால் சற்று அழுத்தமாகவே கூறினான்:

''அப்பா, இங்கே நீங்கள் என் தந்தையுமல்ல; நான் உங்கள் மகன் கருணாகரனும் அல்ல. இங்கு என் பெயர் தன்ராஜ். பிரசித்தி பெற்ற பாங்க் மோசடி, வழிப்பறித் திருடன். என்னைப் பிடித்துத் தருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் இனாம் தருவதாக இந்த இலாகாவே அறிவித்திருக்கிறது. ஆனால் அந்த அதிர்ஷ்டம் இதுவரை யாருக்கும் வாய்க்கவில்லை. உங்கள் குரலைக் கேட்டபிறகு சண்டை போடவோ; உங்களைத் தாக்கவோ முடியாமல் ஏதோ ஒருசக்தி—ஒருவித உணர்வு என்னைத் தடுத்தது. நான் உங்களிடம் வசமிழந்துவிட்டேன். அதற்குக் காரணமும் இப்போது புரிந்துவிட்டது. சரி, நேரமாயிற்று. நான் கூறியதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். வாக்குமூலத்தில் நீங்கள் யாரோ; நான் யாரோ என்பதை மறந்து விடாதீர்கள். பரிசை வாங்கமறந்துவிடாதீர்கள். கண்டிப்பாகப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள். மறக்காமல் அம்மாவிடம் கூறுங்கள்; ''விரைவிலேயே உன் மகன் நல்லவனாகத் திருந்திதானே உன்னைத் தேடி வருவான்?' என்று. இப்படி அவன் கூறிக் கொண்டிருக்கும்போதே வாசலிலே கேட்ட பூட்ஸ் ஒலியைக் கேட்டு கருணாகரன்' என்னும் தன்ராஜ் சட்டென்று அந்த அறையின் மூலையில் சென்று முடங்கிவிட்டான்.

பிள்ளையும் அந்தக் குறிப்பையுணர்ந்து, பளிச்சென்று தன்னுடைய பெஞ்சில் அமர்ந்துவிட்டார்.

பூட்ஸ் ஒலியைத் தொடர்ந்து ஒரு 'வான்' வந்து நின்றது. அதிலிருந்து சிலர் இறங்குவதையும் பிள்ளை உணர்ந்தார்.

—மகன் கட்டளை இட்டிருக்கிறானே!

குளமாயிருந்த விழிகளைச் சட்டென்று பிறர் அறியா வண்ணம் துடைத்துக்கொண்ட பிள்ளையவர்கள் அந்த 'லாக்'அப்பையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பிரளயமாக உள்ளத்தினுள் பெருக்கெடுக்கும் சோகத்தில் அவருக்கு மட்டும்தானா பங்கு? இதயமே வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது.

—"காமாட்சி...! நீ இன்னும் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டியதுதான்..."— என்று மெல்ல அவரது உதடுகள் முணுமுணுத்தன.

—தினமணி சுடர்

★

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
2. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள்
3. கப்பு கான்வென்ட்டுக்குப் போகிறாள்
4. ஜேம்ஸ்பாண்ட் சங்கர்
5. காப்டன் குமார்
6. மாஸ்டர் ராஜா
7. மங்களபுரி வீரன்
8. நாடோடி இளவரசன்
9. கவிமணியின் கதை
10. பிள்ளையார் சிரித்தார்

10. புல்லின் இதழ்கள்

11. சிலதாகங்கள் தணிவதில்லை—(அச்சில்)